Registered in Ceylon as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது சித்திரை 27 ஆம் நாள் துல்ஹஜ் 5 (10-5-62) வியாழக்கிழமை இதழ் 88

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்-2 மதுரை

பார்லிமெண்ட்

# நெடுந்தீவில் பஸ்சேவை

## விரைவில் ஆரம்பமாகும் என மந்திரி உறுதி

### எம். பி. யின் பிரேரணை நிறைவேறியது

கொழும்பு, புதன்

நெடுந்தீவில் கூடியவிரைவில் பஸ்சேவை ஒன்று நடத்தப்படும் என பார்லிமெண்டில் தேசிய சேவைகள் மந்திரி திரு. எம். பி. டி. இஸட் சிரிவர்த்தன வாக்குறுதியளித்தார். இது சம்பந்தமாக ஊர்காவற்றுறை எம். பி. வி. ஏ. கந்தையா கொண்டு வந்த ஒரு பிரேரணை நிறைவேறியது.

ஊர்காவற்றுறைத் தொகுதியில் பிரயாணிகளையும், சாமான்களையும் கடல்மூலம் (மோட்டார்படகு மூலம்) ஏற்றிச் செல்லும் பொறுப்பை இ. போ. ச. ஏற்கவேண்டுமென்ற பிரேரணையை திரு. வி. ஏ. கந்தையா பார்லிமெண்டில் இன்று கொண்டுவந்தார். திரு நவரத்தினம் இதை ஆமோதித்தார்.

திரு. பீலிக்ஸ் இதற்குப் பதிலளிக்கையில் பஸ் சேவையை தரையில் தவிர, கடலில் நடத்துவதற்கான சட்ட விதிகள் இருப்பதாகத் தெரியவில்லை எனக் கூறினார். "இந்தப் பிரச்சினை மிகவும் கவனமாக ஆராயப்பட வேண்டும். முதலில், சிறந்த முறையான போக்குவரத்து சேவை நடத்த முடியுமா என்று முதலில் ஆராயப்படவேண்டும். இத்தீவுக்கு சிறந்த ஒரு இணைப்பு சேவை அவசியம் என அரசாங்கம் கொள்கை அளவில் ஏற்றுக்கொள்கிறது" என்றும் திரு. பீலிக்ஸ் கூறினார்.

அரசாங்கம் இதைக் கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளும்போது, மாற்றுப் போக்குவரத்து முறை ஒன்று கண்டுபிடிக்கப்படா விட்டால் நிலைமைக்குத் தக்கபடி போக்குவரத்துச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என திரு. கந்தையா கூறினார். நெடுந்தீவில் இ. போ. ச. ஒரு பஸ்சேவையைநடத்த வேண்டும் என இச்சபை கருதுகிறது" எனக்கூறும் ஒரு பிரேரணையைத் தாக்கல் செய்தார். அவர் கூறியதாவது:-

"தீவுகளில் பஸ்சேவை நடத்துவதில் கஷ்டம் ஒன்றும் இல்லை. 7 மைல் நீளத்திற்கும், 3 மைல் குறுக்காகவுமே இத்தீவில் ரோட்டுக்கள் இருக்கின்றன. நயினாதீவில் இ. போ. ச. ஒரு பஸ்சேவை நடத்த ஆரம்பித்துள்ளது. நா தீபத்திற்கு பௌத்தர்கள் செல்கிறார்கள் என்பதே அதற்குக் காரணம். ஒருமைல் நீள பாதையே அங்கு [illegible]

ஆனால் நெடுந்தீவு மக்கள் அவசர போக்குவரத்தின்றி பெருங் கஷ்டத்திலிருக்கின்றனர். பிரசவத் தாய்மார்கள் பலர் ஆஸ்பத்திரிக்குச் செல்ல மாட்டுவண்டி கிடைக்காமலும், அவ்வளவுதூரம் நடக்க முடியாமலும் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். வழியில் அவர்கள் பிரசவித்திருக்கிறார்கள். நிலப் போக்குவரத்து சேவையின்றி நெடுந்தீவு மக்கள் கஷ்டமடைந்துள்ளார்கள். இவ்விடத்தில் பஸ்சேவை நடத்துவதால் நஷ்டமேற்பட்டபோதிலும், ஒருசமூக சேவையாகக் கருதி அரசாங்கம் இதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்".

திரு. அமிர்தலிங்கம் பிரேரணையை ஆமோதித்துப் பேசுகையில் கூறியதாவது:-

"நெடுந்தீவுக்கு பஸ்சேவை நடத்துவதாக அரசாங்கம் உறுதி அளித்தும் ஒன்றுமே செய்யப்படவில்லை. பெரிய பஸ்களை அங்கு அனுப்புமாறு நான் கேட்கவில்லை. சிறிய பஸ்கள் இருந்தால் போதுமானது. இங்கு பஸ்சேவை லாபத்தில் நடக்குமென்பதில் சந்தேகமில்லை".

தேசிய சேவைகள் மந்திரி திரு. எம். பி. டி.. இஸட் சிரிவர்த்தன இதற்குப் பதிலளிக்கையில் நிதிநிலைமை அபிவிருத்தியடைந்தவுடன் இவ் விவகாரத்தைக் கவனிகக முயற்சிப்பதாகக் கூறினார்.

திரு. கந்தையா: நிதிமந்திரியிடம் நான் பேசியபோது அரசாங்கம் கொள்கையளவில் இதை ஏற்றுக்கொண்டிருப்பதாயும், கூடியவிரைவில் பஸ் சேவை அங்கு நடத்தப்படும் எனவும் அவர் பதிலளித்தார்.

திரு. சிரிவர்த்தன இதற்குப் பதிலளிக்கையில் கூடிய விரைவில் பஸ்சேவை அங்கு நடத்தப்படும்என உறுதியளித்தார். [illegible] நிறைவேறியது.

## மேயர் பிரச்னை நீதி மன்றம் செல்லும்?

### இரு பகுதியினரும் தீவிர நடவடிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

**யாழ்ப்பாண மேயர் பதவி நீக்கப் பிரச்னை நீதி மன்றத்துக்குச் செல்லக்கூடிய நிலைமைக்கு வந்துள்ளதாகத் தெரிகிறது.**

யாழ்ப்பாணம் மேயர் திரு. எம். ஜெக்கப்மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை உறுதிப்படுத்துவதற்கான கூட்டம் இம்மாதம் 15 ம் திகதி நடைபெறவிருக்கிறது.

முதன் முறை இப்படியான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்ட விசேஷ கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதைத் தொடர்ந்து எழுந்த சட்டப் பிரச்னை சம்பந்தமாக உறுதிப்படுத்த கூட்டப்படவிருக்கும் இக்கூட்டத்தை நிறுத்தி வைக்குமாறு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படலாமென வந்த செய்தி ஞாபகமிருக்கலாம். இப்படியான வழக்கொன்றை சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்வதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

இப்படியான வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் பட்சத்தில் இதனை எதிர்த்து வழக்காட மாநகர சபை எதிர்க் கோஷ்டியினர் கொழும்பைச் சேர்ந்த பிரபல வழக்கறிஞர் இருவரை ஏற்பாடு செய்திருப்பதாகவும், வழக்கு 'லிஸ்ட்' செய்யப்பட்டதும் இவர்கள் ஆஜராகுவர் எனவும் தெரிகிறது.

இந்த வழக்கு இம்மாதம் 14 ம் திகதிவரையில் தாக்கல் செய்யப்படலாம்.

## சர்வோதய மகாநாடு

கொழும்பு, புதன்

சர்வோதய சிரமதான இயக்கம் வார இறுதியில் அதன் 3-வது ஆண்டு மகாநாட்டை நடத்தும். பன்னிப்பிட்டியில் நடைபெறவிருக்கும் இம் மகாநாட்டில் இலங்கையிலுள்ள இந்திய ஹைக்கமிஷன் திரு. கபூர் தலைமை பேச்சாளராக விளங்குவார்.

---

## ஏர்சிலோன் உல்லாச சேவை

கொழும்பு, புதன்

அடுத்தவார இறுதியில் வெஸாக் கொண்டாட்டத்தின் போது ஏர்சிலோன் ஸ்தாபனம் கொழும்புக்கு மேல் உல்லாச சேவையை நடத்தும். நபர் ஒருவருக்கு ரு. 10 கட்டணம் வசூலிக்கப்படும்.

---

## பாக். நிபுணர்கள் இலங்கை வருகை

கொழும்பு, புதன்

பாகிஸ்தானிலிருந்து 3 குடும்பக்கட்டுப்பாட்டு நிபுணர்கள் இலங்கைக்கு விஜயம் செய்வார்கள். இலங்கையிலுள்ள பல குடும்பக்கட்டுப்பாட்டு நிலையங்களுக்கு அவர்கள் விஜயம் செய்வார்கள்.

## வீதிகளில் பகிரங்க தண்டனை!

### பொலிசார் பற்றி யாழ்ப்பாணத்தில் புகார்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணப் பகுதியில் இப்பொழுது பொலிசார் கொடூரமான முறையில் பகிரங்கத்தண்டனைகள் அளிப்பதாகப் புகார் செய்யப்படுகிறது. இப்பகிரங்கத் தண்டனை அளிக்கும் முறை நகரிலிருந்து வெளியிடங்களுக்கும் பரவி வருவதாகத் தெரிகிறது.

சட்டத்திற்கு மாறாக நடந்து கொள்ளுவதாகச் சொல்லப்படும சைக்கிள் பிரயாணிகள், கார் சாரதிகள் ஆகியோர் மீது இப்படியான கடுந்தண்டனைகளைப் பொலிசார் கட்டவிழ்த்து விடுகின்றனராம்.

ஒரு சைக்கிளில் இருவர் பிரயாணஞ் செய்தால் வழக்குப் பதிவு செய்வதற்குப்பதிலாக அதன் சில பிரதான உறுப்புக்களை பிடுங்கியெடுத்து காற்றை வெளியேற்றி சைக்கிளைத் தலையில் சுமந்து செல்லச் செய்வதிலும் அடிப்பதிலும் இங்குள்ள பிரதான பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிலர் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது.

இதேபோல் அதிக பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் கார் சாரதிகளுக்கும் தண்டனை அளிக்கப்படுகிறதாகப் புகார் செய்யப்படுகிறது.

கொழும்பு, புதன்

அடுத்த மாதமுற்பகுதியில் மக்கள் சுகாதார வாரத்தை விரிவான முறையில் கொண்டாடுவதற்கு சௌக்கியப்பகுதி ஏற்பாடு செய்திருக்கிறது.

## பார்லிமெண்டில் கெனமன் கேள்வி

கொழும்பு, புதன்

இன்று பிற்பகல் பார்லிமெண்ட், உபசபாநாயகர் திரு ஹியுபெர்ணன்டோ தலைமையில் கூடியபோது, கல்வி மந்திரியிடம் திரு. பீட்டர் கெனமன் பின்வரும் கேள்வியைக் கேட்டார்: "அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்ட மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் எச். எஸ். ஸி. விஞ்ஞான வகுப்புகளை நடத்த கல்வி மந்திரி அனுமதியளிப்பாரா? விஞ்ஞான பாடங்களை போதிக்கத் தகுதியுடைய இலங்கைப் பல்கலைக்கழகத்தை சேர்ந்த பட்டதாரி ஆசிரியர்கள் அக்கல்லூரியில் இருக்கிறார்கள், எஸ். எஸ். சி. 'ஆட்ஸ்' வகுப்புகளை நடத்த குறிப்பிட்ட கல்லூரியில் பல வருடங்களுக்கு முன்னரே அனுமதியளிக்கப்பட்டிருந்தது"

கல்வி மந்திரியின் பார்லிமெண்ட் காரியதரிசி திரு. வி. டி. ஜி. கருணரத்ன, திரு. பீட்டர் கெனமனின் கேள்விக்குப் பதிலளிக்கையில், அந்தப்பகுதியிலுள்ள வேறு இரண்டு பாடசாலைகளில் விஞ்ஞான பாடங்களைப் போதிப்பதற்கு போதுமான ஆசிரியர்கள் இருக்கிறார்களென்றும், இதனால் மெதடிஸ்த மத்திய கல்லூரி பற்றி ஆராயப்படவில்லையென்றும் கூறினார்,

திரு. பீட்டர் கெனமன் தொடர்ந்து பேசுகையில், பாடசாலை மாணவர்கள் விஞ்ஞான பாடங்களை கற்பதற்கு அதிக விருப்பம் கொண்டுள்ளனரென்றும், ஆனால் பாடசாலையில் விஞ்ஞான பாடங்களைப் போதிப்பதற்கு அனுமதி மறுக்கப்படுவதன் காரணம் புரியாத புதிராக விருக்கிறதென்றும் கூறினார்.

# யாழ்ப்பாணத்தில் மிகப் பெரிய விளையாட்டுப் போட்டி

## இந்திய வீரர்களும் கலந்துகொள்வர்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் இதுவரை நடந்திராத அளவு மிகப் பிரமாண்டமான முறையில் ஓர் விளையாட்டு விழா நடைபெறவிருக்கிறது. இலங்கை ஒலிம்பிக் காமன்வெல்த் விளையாட்டுச்சங்கத்தின் அனுசரணையில் 13 தினங்கள் நடைபெறவிருக்கும் இவ்விளையாட்டு விழாவில் மொத்தம் 15 விளையாட்டுக்களுக்குமேல் இடம்பெறவிருக்கிறது.

இப்போட்டிகளில் இலங்கை, இந்தியா ஆகியவற்றின் தலை சிறந்த விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்ளுகின்றனர்.

இலங்கை ஒலிம்பிக் காமன்வெல்த் விளையாட்டுச் சங்கம் இவ்வாண்டு இலங்கையிலிருந்து ஒலிம்பிக் விளையாட்டுக்களில் கலந்து கொள்ளச் செல்லும் இலங்கை விளையாட்டு வீரர்களுக்கு உதவும் வகையில் ஜூன் 24-ம் திகதி தொடக்கம் ஜூலை 6-ம் திகதி வரை இப்படியான விளையாட்டுப் போட்டிகளை நடாத்த ஏற்பாடு செய்துள்ளது.

இந்தச் சங்கத்தின் சார்பில் யாழ்ப்பாணத்தில் பிரமாண்டமான முறையில் நடைபெறவிருக்கும் இந்த விளையாட்டுப் போட்டிகளுக்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதில் அமைப்பாளர்களான நீதிபதி திரு. ஏ. வயித்திலிங்கமும் டாக்டர் சி. மயில்வாகனமும் ஈடுபட்டுள்ளனர்.

பாஸ்கட் பந்தாட்டம், உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டம், டேபிள்டெனிஸ், டெனிஸ், குத்துச்சண்டை, மல்யுத்தம், மோட்டார் சைக்கிள், சைக்கிள், வண்டிச் சவாரி ஓட்டம், 2 மைல் நீச்சல் போட்டி, இயந்திரப்படகோட்டம், கட்டுமரம் செலுத்தல், பாட்மின்டன், யோகாசனம் ஆகிய போட்டிகள் இடம்பெறுகின்றன.

### பாஸ்கட் பந்தாட்டப் போட்டி

பாஸ்கட் பந்தாட்டப்போட்டியில் இந்திய பாஸ்கட் பந்தாட்டக் கோஷ்டியும் அகில யாழ்ப்பாணக் கோஷ்டிக்குமிடையிலும், யாழ்ப்பாணப் பாடசாலைகள் பாஸ்கட் சாம்பியன் கோஷ்டிக்கும் யாழ்ப்பாண விளையாட்டுக் கழக சாம்பியன் கோஷ்டிக்குமிடையிலும் இருபோட்டிகள் நடைபெறும்.

யாழ்ப்பாண உதைபந்தாட்டக்கோஷ்டிக்கும் கொழும்பு "சன்றைஸ்" கோஷ்டிக்குமிடையே உதைபந்தாட்டப் போட்டி நடைபெறும். டேபிள் டெனிஸ் போட்டியில் இலங்கை சாம்பியன் கோஷ்டியும் உள்ளூர்க் கோஷ்டியும் மோதுகின்றன.

இலங்கை சாம்பியன்கோஷ்டிக்கும் உள்ளூர்க் கோஷ்டிக்குமிடையே மல்யுத்தப் போட்டி நடைபெறும்.

டெனிஸ் போட்டியில் இலங்கைச் சாம்பியன் கோஷ்டியும் யாழ்ப்பாணச் சாம்பியன் கோஷ்டியும் கலந்துகொள்ளும்.

யாழ்ப்பாணத் தெரிவுக் கோஷ்டிக்கும் இலங்கைத்தெரிவுக் கோஷ்டிக்குமிடையே கைப்பந்தாட்டப் போட்டியும், இலங்கைக் கோஷ்டிக்கும் யாழ்ப்பாணக் கோஷ்டிக்குமிடையே 'பாட்மின்டன்' போட்டியும் நடைபெறும்.

இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைக் கவனிப்பதற்கு அமைப்பாளர்கள் விரைவில் ஒரு அமைப்புச் சபையைக் கூட்டி நடவடிக்கையெடுக்கவிருக்கின்றனர்.

---

## இன்று உங்கள் பலன்

—சோதிடஆசான்செ.தெல்லியூர்—

சுபகிருது ஆண்டுசித்திரைத் திங்கள் 27-ம் நாள் வியாழக்கிழமை (10-5-62) ஹிஜ்ரி ஆண்டு 1381, துல்ஹஜ் மாதம் 5-ம் பிறை.

காலை 7-06 வரை ஷஷ்டி. பின்னர் ஸப்தமி, இரவு 12-22 வரை பூசம். அதன்பின்னர் ஆயிலியம். அமிர்தசித்த யோகம். இராகுகாலம் 1-24 முதல் 2-54 வரை. ஷஷ்டிவிரதம். கொச்சுவில் சிவசுப்பிரமணியசுவாமி கோயில், தாவடி விநாயகர், புலோலி மேற்கு அத்தியடிப் பிள்ளையார் கோயில்களின் கொடியேற்றம்.

அச்சுவினி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம், ஆகிய நட்சத்திரங்களுக்கு படுபட்சி நாளாகையால் இன்று இவர்கள் சுப கருமங்களை மேற்கொள்ளுதலாகாது.

### இராசிப்பலன்

பூசம்—ஆயிலியம்: தொழில் நற்பலிதம், பகைநீக்கம், அவசரப்பேச்சு, அதனால் மேலோர் கோபம்.

மேடம்: நல்லோர் நட்பு, வித்தியாபிவிருத்தி, மதிப்புயர்ச்சி, அனுவசியசச்சரவு.

இடபம்: மாதுருவழி உதவி, குடும்பசுகம், பிறர் மதிப்பு, இன்பசிந்தனை.

மிதுனம்: சுபமுயற்சி, பணச்செலவு, கடன்படல், வஸ்திராபரணசெலவு.

கடகம்: விவகாரநன்மை, பணவரவு, முயற்சி வெற்றி, பகைநீக்கம்.

சிங்கம்: புத்திசாதுரியம், வித்தியாபிவிருத்தி, தேகாரோக்கியம், ஆடம்பரச்செலவு.

கன்னி: தொழிலூக்கம், கடும் உழைப்பு, மனத்துணிவு, குடும்பசுகம்.

துலாம்: வித்தியாபிவிருத்தி, மனோதைரியம், நம்பிக்கை ஏமாற்றம், சஞ்சலம்.

விருச்சிகம்: மதிப்புயர்ச்சி, கல்விச்சிறப்பு, முயற்சியில் ஊக்கம், நண்பர்உதவி.

தனு: குடும்பசுகம், பணவரவு, இன்பசிந்தனை, பெண்கள் உதவி.

மகரம்: ஆரோக்கியநலம், சிந்தனைத்தெளிவு, செய்முயற்சிவேற்றி, வாக்குவன்மை.

கும்பம்: அலைச்சல், இனபந்துக்கள்வருகை, செலவு, விவகாரம்.

மீனம்: தேகாரோக்கியம், எதிர்பாராத செலவு, தொழிற் சிறப்பு, பிதாவழிஉதவி.

---


## வரி விளம்பரம்

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50 தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல பவியாகளுக்கும் நற்சாட்சிப்த்திரக்திகளடங்கிய கற்றலோங் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர். கைலாயபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

### அறிவித்தல்

அடைவு நகை ஏலவிற்பனவு தொல்புரம் இ. துரையப்பா அன்சன்ஸ்அவர்களின் அடைவு கடையில் 24-9-58 முதல் 31-12-60 வரையில் அடைவு வைத்து மீட்கப்படாத நகைகளை 9.6.1962திகதிசனிக்கிழமை முற்பகல் 8 மணிக்கு முதல் மேற்படி கடையில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

ந. ஆறுமுகம்,
வெந்தீஸ் மேஸ்தர்

சித்தங்கேணி
7—5—1962


---

## அதிக தாவர உணவுகளை உட்கொள்ளுங்கள்

### உதவி மந்திரி புத்திமதி

ஹபறதுவ, செவ்வாய்

"தீவிரமாகப் பெருகி வரும் ஜனத்தொகையைப் பாதுகாப்பதற்கு உணவு உற்பத்திச் சபைகளை உருவாக்கவேண்டும்" என்று அற்றங்கிற்ற கிராம முன்னேற்றச் சபையின் திறப்பு விழாவின் போது உதவி உணவு வர்த்தக மந்திரி திரு. டி. எஸ். குணசேகரா கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:-

பௌத்த நாடென்று நற்பெயர் பெற்றிருக்கும் இந் நாட்டிலே, கர்ப்பத்தடை பற்றிப் பேசுவது மனவருத்தத்துக்குரிய செயலாகும்.

இப்பொழுது மக்கள் கருவாட்டின் மீது மிகுந்த ஆர்வம்காட்டி வருகிறுர்கள், இது (கருவாடு) ஓர் உருசியான உணவு என்ருலும் சத்தற்றது. பச்சைப்பசேலென்று காணப்படும் இலை குழைகளை உண்ணும் யானையானது எவ்வளவு வீரமும் பலமுமுடையதாயிருக்கிறது. ஆகவே நாமெல்லோரும் தாவர உணவுகளை அதிகமாக உட்கொண்டு தைரியத்தையும் வீரத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும்."

---

## இருவருக்கு ஒரே இலக்கம்

### பரீட்சையில் குழப்பம்

ஜாஎல, திங்கள்

ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை நடைபெற்ற மண்டபங்களில் ஒன்ருகிய ஆர். சி. எம். பாடசாலையில், பரீட்சை ஆரம்பமாவதற்கு ஒரு சில நிமிஷங்கட்கு முன் சிறு குழப்பமேற்பட்டது.

நாலு பரீட்சார்த்திகளுக்கு இருவருக்கு ஒரு சுட்டிலக்கம் வீதம் இருந்ததைத் தொடர்ந்தே மண்டபத்தில் சிறு குழப்ப மேற்பட்டது. 213ம், 215ம் தான் 4பேருக்கும் வழங்கப்பட்ட அந்த சுட்டிலக்கங்கள்.

பரீட்சை மேற்பார்வையாளர் முதல் இருவரை மேற்படி இலக்கங்களுடன் விடைகளை எழுதுமாறும் மற்றஇருவரை 213 ஏ, 215 ஏ என்ற சுட்டிலக்கங்களுடன் எழுதுமாறும் பணித்து இது விஷயமாக பரீட்சைக் கமிஷனருக்கு அறிவிக்குமாறு பரீட்சார்த்திகளை கேட்டுக்கொண்டார்.

---

## வலி. மேற்கு கி. ச. தாச்சி சுற்றுப் போட்டி

### சுழிபுரம் வெற்றி

சுழிபுரம், செவ்வாய்

சுதுமலை விவேகானந்தா கோஷ்டிக்கும் சுழிபுரம் கிராம முன்னேற்றச்சங்க தங்கராஜன் கோஷ்டியினருக்குமிடையே நடைபெற்ற வலிகாமம் மேற்கு கிராமாபிவிருத்திச்சங்க சமாஜத்தின் தாச்சிப்போட்டியில் சுழிபுரம் கோஷ்டி 4 பழங்களால் வெற்றிபெற்றது.

திரு. பாக்கியநாதன் பிரதம மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

---


### புளியங் கொட்டை தேவை

புளியங் கொட்டை சேகரித்துத் தரக்கூடியவர்களிடம் நாம் ருத்தல் கணக்கில் விலைக்கு எவ்வளவும் எடுக்கத் தயாராயுள்ளோம்.

S. கோணேசலிங்கம்,
159/3, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.


---

## முஸ்லிம்களுக்கு தனிப்பாடசாலை வேண்டும்

### மாணவர் கூட்டத்தில் தீர்மானம்

பதுளை, செவ்வாய்

சிங்கள மாணவர்கட்கும், தமிழ் மாணவர்கட்கும் பதுளையில் தனித்தனி பாடசாலைகள் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. அதைப்போன்று முஸ்லிம் மாணவர்கட்கும் ஒரு தனியான பாடசாலை வேண்டும்" என்று பதுளை முஸ்லிம் மாவித்தியாலயத்தின் மாணவர் தேர்ச்சிச் சங்க மாதாந்தக் கூட்டத்தில் ஒரு தீர்மான்ம் நிறைவேற்றப் பட்டது.

தனியான ஒரு பாடசாலை கிடைக்காவிட்டால் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட பணத்தைக் கொண்டு முஸ்லிம் மாவித்தியாலயத்தைப் பெரிதாக கட்டவேண்டுமென்றும் அத்தீர்மானம் கூறுகிறது.

மாணவர் தேர்ச்சிச்சங்க உத்தியோகஸ்தர்களாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்:- பிர்தவுஸ். உபதலைவர்:- பாறுக். காரியதரிசி:- லெப்பை, பாஸிஸ் அஸிஸ். தனதிகாரி:- சுலைமான்.

---

## நூல் நிலையங்களில் ஓய்வு நேரம்

### சாவகச்சேரி எம். பி. யோசனை

மீசாலை, புதன்

'அறிவு நிலையை மேம்படுத்த நூல் நிலையங்கள் பெரிதும் உதவுகின்றன. இளைஞர்களும் முதியவர்களும் தமது ஓய்வு நேரத்தை நூல் நிலையங்களில் கழிப்பது மிகுந்த பிரயோசனத்தை அளிக்க வல்லது.' இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், சப்பச்சைமாவடி வட்டாரத்திலுள்ள கணேசன் சனசமூக நிலையத்தின் ஆருவது ஆண்டு விழாவிற் பேசும்போது குறிப்பிட்டார்.

நிலையத்தலைவர் வித்துவான் மு. சபாரத்தினம் விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசும்போது சாவகச்சேரி பட்டின சங்கத்தலைவரும் வட்டார அங்கத்தவரும் நூல் நிலையத்துக்கு இயன்ற உதவிகள் புரிந்து வருவதைப் பாராட்டினர்.

வீரசிங்கம் வித்தியாசாலை உதவி அதிபர் திரு. இ. த. சுப்பிரமணியம் பேசியதாவது:-

"செல்வம் நிலையற்றது. செல்வர்கள் நிலையற்ற செல்வத்தைக் கொண்டு நிலையான செல்வமாகிய தருமத்தைச் செய்ய வேண்டும். வறுமைக்கு உதவும் நவீன காசோலையாக அறத்தை மதிக்கவேண்டும்"

சாவகச்சேரி பட்டின சங்கத் தலைவர் திரு. எஸ். கையிலாயபிள்ளை பேசியதாவது:-

"பட்டின சங்கத்துக்கு மக்கள் கொடுக்கும் வரிப் பணம் சீரிய முறையிற் செலவு செய்யப்படுகிறது. சந்தைக்கு வேண்டிய கட்டடங்கள் நிறுவப் பட்டுள்ளன. வாசிகசாலைகளுக்கும், பால் நிலையங்களுக்கும் பட்டின சங்கத்தின் ஆதரவு இருந்து வருகின்றது."

பட்டின சங்க அங்கத்தவர், ஆயுர்வேத வைத்தியர் ப. விரசிங்கம் உட்பட வேறும் பலர் பேசினர். இளைஞர்களின் நாடகம் ஒன்றும் நடிக்கப் பெற்றது.

---

## பதுளை நகரசபை இடைத்தேர்தல்

### 15-ல் அபேட்சை மனு

பதுளை, செவ்வாய்

இம்மாதம் பதுளை நகரசபையின் முதலாம் வட்டார இடைத்தேர்தலுக்கான நியமனப் பத்திரம் பதுளைக்கச்சேரியில் தாக்கல் செய்யப்படும் இத்தேர்தல் பதுளை நகரசபையின் முதலாம் வட்டார அங்கத்தவரான திரு. இரத்வத்தை காலஞ்சென்றபடியால் நடைபெறுகிறது.

---

## யாழ். எம். பி. நாளை வருகிறர்

யாழ்ப்பாணம், வியாழன்

ஐரோப்பிய பிரயாணத்தை மேற்கொண்டிருந்த யாழ்ப்பாண எம். பி. திரு. ஏ. டி. துரையப்பா இன்று பம்பாயிலிருந்து கொழும்புக்கு வந்து சேருவாரெனத் தெரிகிறது.

வெளிக்கிழமை காலை புகையிரத மூலம் அவர் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேருவார். யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் ஓர் வரவேற்பு அளிப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப் பட்டுள்ளன.

---


## 8-வது ஆண்டு விழா

### ஹான்ட்லூம்ஸ்

இந்திய அரசாங்கம்

5% விலைக் கழிவு

1962 மே 2-ம் திகதியிலிருந்து
மே 12-ம் திகதி வரை

## ஹான்ட்லூம்ஸ்

இந்திய அரசாங்கம்
7, செட்டியார் தெரு, கொழும்பு 11
47, மெயின் வீதி, யாழ்ப்பாணம்,- 69, கொழும்பு வீதி, கண்டி
20, பஜார் வீதி, பதுளை.

# பஞ்சாபி ராஜ்ய கோரிக்கையை ஒத்தி வைக்கவேண்டும்

## மாஸ்டர் தாராசிங் அறிவிப்பு

### "சீன, பாகிஸ்தான் நெருக்கடி தீரும்வரை ஐக்கியம் தேவை"

லூதியானு, மே 9

**இந்தியாவுக்கு சீனுவும், பாகிஸ்தானும் நெருக்கடி கொடுத்துக்கொண்டுள்ளதால் அந்த நெருக்கடிகள் நீங்கும்வரை பஞ்சாபி ராஜ்யக்கோரிக்கை போன்ற கோரிக்கைகளை நிறுத்திவைக்கவேண்டும் என்று அகாலி தள இயக்கத் தலைவர் மாஸ்டர் தாராசிங் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

லூதியானுவில் நேற்று நிருபர்களிடம் பேசுகையில் சீனுவும் பாகிஸ்தானும் இந்தியாவுக்கு இன்று தலையிடிகொடுத்துக்கொண்டுவருவதைக் குறிப்பிட்டு, இச்சமயத்தில் ஒவ்வொரு இந்தியனும் தங்களுக்குள் உள்ள வேற்றுமைகளை மறந்து நாட்டைப் பாதுகாப்பதற்குத் தயாராக இருக்கவேண்டுமென்ருர்.

பஞ்சாபி ராஜ்யக்கோரிக்கை போன்ற சகல கோரிக்கைகளையும் ஒத்திவைத்துவிட்டு அந்நியரின் பயமுறுத்தலிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கு இந்துக்களும் சீக்கியர்களும் ஒன்றுசேர வேண்டுமென்று மாஸ்டர் தாராசிங் கேட்டுக்கொண்டார்.

முன்பிருந்ததைவிட இன்றுதான் இந்தியர் ஐக்கியமாக இருக்கவேண்டியது அவசியம் என்றும் அவர் கூறினர்.

## மிகப்பெரிய அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்

வாஷிங்டன், மே 9

16 போலாரிஸ் ஏவுகணைகள் பொருத்தப்பட்ட மிகப்பெரிய அணுசக்திநீர்மூழ்கிக் கப்பல் ஒன்றை நேற்று அமெரிக்கா முதல் தடவையாக நீருக்குள் செலுத்தியது. ஏழாயிரம் தொன் எடையுள்ள இந்த அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் அமெரிக்காவிடமுள்ள அணு சக்தி நீர்மூழ்கிக் கப்பல்களில்மிகப்பெரியதாம்.

## சிக்கன நடவடிக்கை

புவனஸ்அயர்ஸ், மே 9

ஆர்ஜன்டைனுவின் பொருளாதார நிலைமையைச் சீராக்குவதற்காகக் கடுமையான சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆர்ஜன்டைனுவின் ஆயுதப் படைகள் சம்மதித்துள்ளன.

## அல்ஜீரிய பேச்சுவார்த்தை

டூனிஸ், மே 8

அல்ஜீரியாவில் பலாத்கார செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டுள்ள ஐரோப்பிய தீவிரவாதிகளின் இரகசிய ராணுவஸ்தாபனத்தின் நடவடிக்கைகளை ஒழித்துக்கட்டுவது சம்பந்தமாக அல்ஜீரிய தேசியத் தலைவர்களும் பிரஞ்சு அரசாங்க அதிகாரிகளும் மீண்டும் கூடி ஆலோசிக்கவிருக்கிருர்களெனக் கூறப்படுகிறது.

## ஈரானுக்கு வர்த்தகத்தூது

கராச்சி, மே 9

பாகிஸ்தான் வர்த்தக மந்திரி தலைமையில் நான்கு பேர் கொண்ட வர்த்தக தூது கோஷ்டியொன்று ஈரானுக்குப் புறப்பட்டுச் சென்றது. ஈரானுடன் புதிய வர்த்தக ஒப்பந்தமொன்றை இத் தூது கோஷ்டி செய்து கொள்ளுமென்று தெரிகிறது.

## நேபாளத்தில் கலகக்காரர் ஐவர் பலி

காட்மாண்டு, மே 6

நேபாளத்தில் ராணுவமும் பொலிசும் கூட்டாக எடுத்த ஒரு நடவடிக்கையின் போது ஐந்து கலகக்காரர்கள் கொல்லப்பட்டதாகவும் இருவர் காயமடைந்ததாகவும் ஒருவர் கைது செய்யப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது. ரேடியோசெட், ஆயுதங்கள் முதலியனவும் கலகக்காரர் வசமிருந்து கைப்பற்றப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

## 4 கோவா தேசியவாதிகள் விடுதலை பெற்று திரும்பினர்

பஞ்சிம், மே 9

போர்ச்சுக்கலில் பல வருடங்கள் சிறைவாசமனுபவித்த நான்கு கோவா தேசியவாதிகள் விடுதலை பெற்று நேற்று பஞ்சிம் வந்து சேர்ந்தனர். பெருந்தொகையான மக்கள் விமானநிலையத்தில் நின்று 'சுதந்திர கோவா ஜிந்தாபாத்', 'நேருஜிக்கு ஜே' என்று கோஷமிட்டு நான்கு தேசியவாதிகளையும் வரவேற்றனர்.

## லிஸ்பனில் ஆர்ப்பாட்டம்

### ஒருவர் பலி, 9 பேர் காயம்

லிஸ்பன், மே 9

போர்ச்சுக்கலில் டாக்டர் சலசாரின் ஆட்சியை எதிர்த்து நேற்று லிஸ்பனில் நடந்த ஒரு ஆர்ப்பாட்டத்தில் ஆர்ப்பாட்டக்காரருக்கும் பொலிசாருக்கும் ஏற்பட்ட கைகலப்பில் ஒருவர் மாண்டார். ஒன்பது பேர் காயமடைந்தனர்.

பாதுகாப்புப் படையினர் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

## இந்தோனேஷியாவுக்கு ரஷ்ய ஆயுதங்கள்

மாஸ்கோ, மே 9

இந்தோனேஷியாவுக்கு ஆயுதங்கள் வழங்குவதற்கான புதிய ஒப்பந்தமொன்றில் சோவியத் யூனியனும் இந்தோனேஷியாவும் நேற்று கைச்சாத்திட்டன.

## அவசரம் குறிக்கோளை கெடுத்தது

புத்தளம், செவ்வாய்

பள்ளிக்கூடங்களை அரசாங்கம் பொறுப்பேற்பதனுல் கிடைக்கக்கூடிய பலாபலன்கள் கல்வி இலாகாவின் அவசர நடவடிக்கை காரணமாகச் சிதைந்து போயின என இவ்வட்டார பெற்றேர் சங்கம் கருதுகிறது.

அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றதினுல் உருவான சஹிராக்கல்லூரி தமிழ் ஆரம்ப பாடசாலையில் மூன்று ஆங்கில உதவியாசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கு முன் இவ்வாசிரியர்கள் ஆங்கிலம் போதித்து வந்தனர். இவர்கள் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிப்பதற்குப் போதிய அறிவில்லாதிருக்கின்றனர். இதனுல் மாணவர்கள் தமிழ் கற்க முடியாதிருக்கிறது. இவர்களை தமிழ் ஆரம்ப பாடசாலையில் விட்டிருப்பதினுல் ஓர் பிரயோசனமுமில்லையென பெற்றேர் சங்கம் கருதுகிறது.

## பதில் வந்தது 6 மாதத்தின்பின் ஆனுல்.....?

நாவலப்பிட்டி, செவ்வாய்

இங்குள்ள ஒருவர் சென்ற வருடம் பிறப்பு சாட்சிப்பத்திரத்தின் பிரதியொன்றைப் பெறுவதற்கு மனுச் செய்திருந்தார்.

6 மாதத்துக்குப் பிறகு மாவட்ட பதிவுகாரரிடமிருந்து இவருக்கு பதில் வந்திருந்தது. ஆவலுடன் உடைத்துப் படித்த இவர் மனுவுடன் 25 சத முத்திரை அனுப்பப்படவில்லை என்று அந்தக் கடிதத்தின் வாசகத்தைக் கண்டு அசந்து போனராம்.

## சுவர்க்கடிகாரம் திருடியவருக்கு

### ஒரு வருடக்கடுங் காவல்

தெகிவளை, செவ்வாய்

நியூட்டன் பெரேரா என்பவர் பட்டப்பகலில் ஒரு வீட்டில் புகுந்து சுவர்க்கடிகாரத்தைக் களவாடிச் சென்றதாகக் குற்றம் சாட்டித்தொடரப்பட்ட வழக்கு கொழும்பு தெற்கு மஜிஸ்டிரேட் திரு. டி. எஸ். எல். பி. அபயசேகரா முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டபோது மஜிஸ்டிரேட் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு அவருக்கு ஒரு வருடக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

இந்தவழக்கை பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. சோமரத்ன தொடர்ந்திருந்தார்.

பெரேரா முன்னரும் நான்கு தடவைகள் இவ்வித திருட்டுக்களைச் செய்திருந்தாரென்றும் கோர்ட்டில் தெரிவிக்கப்பட்டது.

## 6-வது குண்டு வெடித்தது!

வாஷிங்டன், மே 9

அமெரிக்கா மற்றொரு அணுகுண்டை நேற்று பசிபிக்கிலுள்ள கிறிஸ்மஸ் தீவில் பரீட்சை செய்தது. நடுத்தர சக்தி வாய்ந்த இந்தக் குண்டு விமானத்திலிருந்து வீசப்பட்டு பரீட்சிக்கப்பட்டது. ஏப்ரல் 25-ம் திகதி அமெரிக்கா பூமிக்குமேல் குண்டுப்பரீட்சையை ஆரம்பித்தது. இதுவரை ஆறுகுண்டுகள் பரீட்சிக்கப்பட்டுள்ளன.

## அரசாங்கம் எடுத்த பாடசாலைகள்

பருத்தித்துறை, திங்கள்

வடமராட்சிப்பகுதியில் சமீபத்தில் பின்வரும் பாடசாலைகள் அரசாங்க உடைமையாயின.

துன்னலை மெதடிஸ்த மிஷன் தமிழ்ப் பாடசாலை, கரணவாய் அமெரிக்க மிஷன் பாடசாலை, தொண்டமானுறு அமெரிக்க மிஷன் பாடசாலை, புலோலி தெற்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்ப் பாடசாலை, வல்வெட்டி இந்து தமிழ்ப் பாடசாலை, உடுப்பிட்டி இந்து தமிழ்ப் பாடசாலை, திக்கம் மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, குடத்தனை கரையூர் ரோமன் கத்தோலிக்க பாடசாலை.

## 'ஆன்மீகம் அறநெறியிலும் இந்தியாமுன்னேறவேண்டும்'

### ராஜன்பாபு வேண்டுகோள்

புதுடில்லி, மே 9

"இந்திய பொருளாதாரமுன்னேற்றத்துடன் அறநெறி ஆன்மீகத்துறையிலும் முன்னேற வேண்டும்" என்று ராஷ்டிரபதி பதவியிலிருந்து ஓய்வு பெறும் டாக்டர் ராஜேந்திர பிரசாத் நேற்று புதுடில்லியில் பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் தமக்களித்த பிரிவுபசார வைபவமொன்றிற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினர்.

எம். பி. க்கள் மத்தியில் மனந்திறந்து பேசுவதாகக் குறிப்பிட்ட ஜனுதிபதி ராஜன் பாபு நாட்டில் நிலவும் பிளவு மனப்பான்மை பற்றியும் அதற்கான காரணங்கள் பற்றியும் கூறினர்.

"சுதந்திரம் பெறுதற்காகச் செய்த தியாகமும் கடமையும் பெற்ற சுதந்திரத்தையும் நாட்டின் உறுதிப்பாட்டையும் பாதுகாப்பதற்கு மிகவும் அவசியம்" என்று ராஜன்பாபு கூறினர்.

குறுகிய மனப்பான்மையும் மொழி மதம் போன்ற விஷயங்களில் சிறுபகுதியினரைத் திருப்திப்படுத்துவதற்காக நாட்டின் முழுநலனையும் பாதிக்கச் செய்து விடக்கூடாது என்று டாக்டர் ராஜேந்திரபிரபிரசாத் கூறினர்.

நாட்டின் முழுநலனையும் மனதில் கொண்டு சேவை புரிய வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார்.

தேர்தல்களில் நிகழக்கூடாத காரியங்கள் நிகழ்ந்து விடக்கூடாதென்று சில பகுதிகளில் முணு முணுக்கப்படுகிறதென்று குறிப்பிட்டார். ராஷ்டிரபதி உண்மையான ஜனநாயகத் தேர்தல்களென்பதற்கு தேர்தல் செலவுகள் மிகக் குறைவாக இருப்பது தான் உதாரணமாகுமென்ருர்.

ஆக்க முயற்சிக்கும் தன்னம்பிக்கைக்கும் ஊக்கமளிக்கப்படவேண்டுமென்று ராஜன் பாபு கேட்டுக் கொண்டார்.

சபாநாயகர் சர்தார் ஹுக்கும்சிங் உபசாரப்பத்திரமொன்றை வாசித்தளித்தார். அதில் ராஜன்பாபுவின் சேவையையும் குணநலன்களையும் பாராட்டப்பட்டிருந்தது.

## 50,000 மாணவர்கள் சத்தற்ற உணவை அருந்துகின்றனர்

### சுகாதார இலாகா தகவல்

கொழும்பு, செவ்வாய்

சென்ற வருடம் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் போஷாக்கு சத்து குறைந்த உணவையே உட்கொண்டார்கள் என சுகாதார இலாகாநடத்தியமதிப்பீட்டின் படி தெரிய வருகிறது.

1960-ம் வருடத்தில் 70,100 மாணவர்களே போஷாக்கு சத்து குறைந்த உணவை உட்கொண்டார்கள். தற்போது 120 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் இவ்வித உணவை அருந்துவதாக சுகாதார இலாகா தெரிவித்துள்ளது.

ஒரு வருடத்தில் 6.1 சத விதத்திலிருந்த இந்த நிலை 10.1 சத விகிதமாக அதிகரித்துள்ளதாம்.

கிராமப்புறங்களிலேயே மாணவர்கள் போஷாக்கு சத்து குறைந்த உணவை உட்கொள்கிருர்களென்றும் தேவையான சத்துக்களில்லாத உணவைத் தயாரிப்பதாலேயே இவ்வித நிலை ஏற்படுவதாகவும் இந்த மதிப்பீட்டை நடத்திய சுகாதார அதிகாரிகள் கொண்ட கோஷ்டி அறிவித்துள்ளது.

பல மாணவர்களுக்குப் பல் நோய் காணப்படுவதாகவும், கண் பார்வை குறைந்துள்ளதாகவும், செவிட்டுத்தன்மை ஏற்பட்டுள்ளதாகவும் இவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். மாணவர்களிடையே இவ்வித நோய் பரவாது தடை செய்வதற்கான தடுப்பு நடவடிக்கையை மேற்கொள்ள சுகாதார இலாகா தீர்மானித்துள்ளது.

## ஏழுமலையானை குசேலர் தரிசித்தார்

திருமலை, மே 8

சென்னை மேயர் திரு. குசேலர் ஸ்ரீ ஏழுமலையானைத தரிசித்தார். திரு. குசேலர் ஒருவேளை ஸ்ரீ ஏழுமலையானைத் தரிசிக்கப் போவதாகச் சொல்லி, ஒரு நாள் சேவித்தும் திருப்தியடையாமல் இரண்டுநாள் தங்கி கண்குளிர தரிசித்துவிட்டுச்சில நாட்களுக்குமுன் திரும்பியதாக கோயில் போஷகர் ஸ்ரீ தேவராஜ் தெரிவித்தார்.

## ஆலய பரிபாலன சபை வருடாந்த மகாநாடு

காத்தான்குடி, புதன்

கிழக்கிலங்கையின் பழம் பெருமை வாய்ந்த கல்லடி உப்போடை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபையின் வருடாந்த மகாநாடு நடைபெற்றது. மகாநாட்டுக்கு ஆலய முகாமைக்காரர் திரு. கே. ஒ. வி. கதிர்காமத்தம்பி தலைமை தாங்கினர். பின் வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. க. முத்துப்பிள்ளை, தலைவர்: திரு. க. உ. வே. கதிர்காமத்தம்பி, உபதலைவர்கள்: திரு. க. சிவலிங்கம், திரு. செ. விஜயகுமணி, இணைச்செயலாளர்: திரு. வீ. கிருஷ்ணபிள்ளை, திரு. இ. இரத்தினசிங்கம், பொருளாளர்: திரு. மு. வேலுப்பிள்ளை. இவர்களுடன் 25 பேர்களைக் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

### மணி வாசகம்

சரியான முறையில் வாழ்க்கை நடத்த ஆரம்பித்தோமானால் மூடநம்பிக்கைகளும் பிற குற்றங்களும் தாமாகவே விலகிப் போகும். சரியானபடி நடந்து கொள்வதே முக்கியம். மனத்திலுள்ள நம்பிக்கைகள் எவ்வாறாயினும் சரி, அவை தாமாகவே சீர்படும்.

— காந்தி அடிகள்

ஈழநாடு
EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு சித்திரை மீ 27 உ (10-5-62)

## இ. போ. ச.

யாழ்ப்பாணத்திலே பஸ் போக்குவரத்தைப்பற்றி நமக்கு அதிக புகார்கள் கிடைக்கின்றன. மணிக்கணக்காகக் காத்திருந்தாலும், பஸ் வருவதில்லை என்றும் அப்படி வந்தால் இடம் கிடைப்பதில்லை என்றும் சொல்லப்படுகிறது. முன்னர் 30 பஸ்ஸுகள் சென்ற பாதையில், இப்போது 10 கூட செல்லுவதில்லையாம். அதனால் பொது மக்களின் போக்குவரத்துக்கு அதிக சங்கடம் ஏற்பட்டுள்ளதாகவும் சிறப்பாக பெண்கள் அதிக கஷ்டப்படுவதாகவும் தெரிகிறது.

இலங்கையின் மற்ற இடங்களைவிட வடமாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் இந்தச் சங்கடம் அதிகமாக இருக்கின்றது. காரணம் புதிய "ஸ்ரீ" பஸ்ஸுகள் அரசியல் காரணங்களுக்காக இப்பகுதிகளில் விடப்பட முடியாமலிருப்பதுதான். இல்லாத பிரச்னையைப் புதிதாகக் கிளப்பி வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கு இவ்வித தொல்லையை ஏற்படுத்தியுள்ள அரசாங்கம் தான், இப்பிரச்சினையைத் தீர்க்கக் கடமைப்பட்டுள்ளது

பஸ் போக்குவரத்து தேச உடைமை ஆக்கப்பட்டால், ஊழல்கள் நீங்கி பொதுமக்களின் போக்குவரத்து வசதிகள் மேம்படலாமென்று பலரும் நம்பிக்கையுடன் எதிர்பார்த்தனர். ஆனால் இதற்கு நேர்மாறாக, முன்னிருந்த நிலைமையே மேலாகுமென்று கருதும்படி இந்த நிர்வாகம் சீர்கேட்டைந்துள்ளது. தீவெங்கும் இந்த பஸ் சேவையைத் திறம்பட நடத்துவதென்பது சுலபமன்று. பலபல சங்கடங்களுள்ளனவென்பது மெய்தான். இந்தச் சங்கடங்களை நீக்கி, பொதுமக்களுக்குப் பத்திரமான, வசதியான முறையில் இந்தச் சேவையை எப்படி நடத்த வேண்டுமென்பதே முக்கிய விஷயம்.

நேற்று முன்தினம் அரசாங்க பார்லிமெண்ட் கட்சிக் கூட்டம் இதைப்பற்றி விவாதித்தபோது இ. போ. ச. நிர்வாகத்தின்மீது பலர் பல புகார்களைக் கூறியுள்ளனர். நிர்வாகத்தை இன்னும் அதிகமாகப் பரவலாக்க வேண்டுமென்றும் மண்டல கிளை ஸ்தாபனங்களுக்கு அதிக அதிகாரம் அளிக்க வேண்டுமென்றும் தெரிவித்தனர். முடிவில் தொழில் அமைச்சின் பார்லிமெண்ட் ஆலோசனைக் கமிட்டிக்கு இது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பொதுஜன வசதிக்கான இவ்விஷயத்தில் வீண் காலதாமதம் செய்யப்படாது. தமிழ்நாட்டிலே தனிப்பட்டவர் நிர்வாகத்தில் நடைபெறும் பஸ் சேவை அதிக திறமையாகவும் மக்களுக்கு வசதியாகவும் லாபகரமாகவும் நடைபெறுகின்றது. இந்த முக்கிய போக்குவரத்து சேவையை, திறம்பட நடத்த இ. போ. ச. வினால் முடியாவிடில் மீண்டும் தனிப்பட்டவர்களின் நிர்வாகத்துக்கு மாற்றிவிடலாமென்றும் பொதுமக்களிடையே கருத்து உருவாகி வருகிறது. இதை உணர்ந்து அரசாங்கம் அவசிய நடவடிக்கைகளை சீக்கிரத்தில் எடுத்து, பொது மக்களின் போக்குவரத்து சங்கடங்களைக் குறைக்கக் கடமைப்பட்டுள்ளது.

# குழந்தைகள் கலை ஆர்வம் அதனை வளர்ப்பது எப்படி?

**குழந்தைகளின் கலை ஆர்வத்தையும் கற்பனைத் திறனையும் வளர்ப்பது எப்படி? நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஓர் ஆசிரியரின் செயல்முறை இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது. எங்கள் நாட்டு ஆசிரியர்களுக்கும் இது உபயோகமானது.**

நெதர்லாந்து நாட்டில் மெப்பெல் நகரில் மூர்ஹென் என்றபெயரில் நிறுவப்பட்டுள்ள குழந்தைகள் பள்ளிக்கூடம் சிறுவர் சிறுமியரின் கற்பனைத்திறனை-கலைஆற்றலை உலகுக்கு அறிவிக்கும் நிலைக்களனாய்த் திகழ்கிறது. இத்துறையில் குழந்தைகளைப் பழக்கிய பெருமை குழந்தைகள் உலகில் குழந்தைகளோடுகுழந்தையாய் வாழும் ஆசிரியை திருமதி ஹெலன் ஈல்ஸிங் அம்மையாரையே சாரும்.

இவர் ஓவியத்தில் கைதேர்ந்தவர். "குழந்தைகளால் எதுவும் செய்யமுடியும்" என்ற கருத்து கொண்டவர். குழந்தைகளின் திறமையில் அவருக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை உண்டு. 'குழந்தைகளின் மனதில் என்னவெல்லாமோ தோன்றுகிறது. அதை அவர்கள் சுயேச்சையாய் வெளியிடும்படி விடவிடவேண்டும்' என்ற கொள்கையில் தீவிரப் பற்றுக்கொண்டவர். மெப்பெல் பள்ளிக்கூடத்துச் சுவரச்சித்திரத்தைப் பார்த்தால் இவர் சொல்வது சரி என்பது புலனாகும். மெப்பெல் பள்ளிக்கூடம் கலைக்கூடமாகக் காட்சியளிக்கிறது.

### கலைக்கேந்திரம்

திருமதி ஈல்ஸிங் தமது பண்ணைவீட்டையே ஒரு கலைக் கேந்திரமாக மாற்றியிருக்கிறார். நெடுங்காலமாக இளைஞர்நலப் பணியில் ஈடுபட்டிருக்கும் இவருக்கு சமாளிக்கமுடியாத முரட்டுக் குழந்தைகளிடம் தனி அக்கறை உண்டு. "ஓவியம்,சிற்பம் முதலிய கலைகளின் விளைவுகள் முக்கியமில்லை; குழந்தைகள் தம்மனத்தில் தோன்றுவதைக் கொஞ்சமும் கட்டுப்பாடில்லாமல் வெளியிடும்படி விட்டால் அதன்மூலம் தோன்றும் விளைவுகள் அதிக அழகுள்ளவை" என இவர் கூறுவார்.குழந்தைகளின் மனத்தில் தோன்றக்கூடிய எண்ணங்களை எல்லாம் கற்பனை செய்து பார்க்கும் திறன் பெரியோருக்கு இருக்க வேண்டியது மிக முக்கியம்.

மெப்பெல் பள்ளிக்கூடத் திட்டத்தை ஆரம்பிக்கும் போதே திருமதி ஈல்ஸிங், குழந்தைகள் எதை எதைஎல்லாம் விரும்புகிறார்கள் என்பதை ஆராய்ந்தறிந்தார். பளபளப்பான வர்ணப் பொருள்கள் எதுவும்குழந்தைகளுக்குப் பிடிக்கும் என்பதைப் புரிந்து கொண்ட இவர் அதனைத்தமது திட்டத்தின் ஆதாரக் கருத்தாக வைத்துக்கொண்டார்.

டச்சுக் கம்பனி ஒன்றிலிருந்து உடைந்த மண்பாத்திரத் துண்டுகளை நிறைய வாங்கினார்.அழுத்தமானவர்ணங்களில் காணும் கண்ணாடித் துண்டுகளையும், மணிகளையும் முத்துக்களையும் வாங்கிச் சேகரித்தார்.

### நேரில் காட்டவேண்டும்

திருமதி ஈல்ஸிங் பறவைகளையும், புஷ்பங்களையும் சித்திரத்துக்குரிய விஷயமாக குழந்தைகளுக்கு சிபார்சு செய்தார். மலர்களையும், பறவைகளையும் கண்டு ஆர்வத்துடன் சித்திரம் வரைய ஆரம்பித்தார்கள். நவீனக் கல்வி கல்வி முறையின் கருத்தைக் கண்டு மயங்காத குழந்தை எது? ஆகவே "மூர்ஹென்" குழந்தைகள் ஒரே ஆர்வத்துடன் சித்திரம் வரைய ஆரம்பித்தார்கள். நவீன கல்வி முறையின் கருத்தை நன்கு அறிந்த திருமதி ஈஸ்ஸிங் குழந்தைகள் வரைவதைத் தவறென்று கூறி நாம் போட்டுக் காட்ட முற்பட்டால் அவர்களது மனத்தில் சஞ்சலம் ஏற்படுமென்று அறிந்தவர். மேலும் தனக்கு ஒன்றுமே தெரியாது என்று குழந்தை நினைத்துக் கொண்டு நாளடைவில் ஆசிரியரையே பார்த்து எழுத ஆரம்பித்து விடும். பலன் அந்தக் குழந்தையின் சித்திரத்தில் சுயமான கற்பனை என்பதே இல்லாமற் போய்விடும் என்பதை நன்குணர்ந்தவர். இதனால் குழந்தைகளுக்கு எந்தப் படத்தையும் பார்த்துப்போடும்படி போதிக்கக்கூடாது. அவர்களை மரங்களும் மலர்களும் பிரயாணிகளும் உள்ள இடங்களுக்கு அழைத்துச் சென்று நேரில்காட்ட வேண்டும். பிறகு அவர்கள் சுயமாகவே கற்பனை செய்து அவற்றை வரைவார்கள். 'குழந்தைகள் வரையும் பறவை ஒன்று, பார்ப்பதற்கு விநோதமாயிருக்கலாம். ஆனால் குழந்தைகளுடைய கற்பனையில் அது ஒரு பறவைதான். இதை நாம் மறக்காமலிருப்பது முக்கியம்' என்று அவர் கூறுவார்.

### மாதிரிப் பரிசோதனை

ஆயத்தப் படங்கள் வரைந்தபின் குழந்தைகள் இந்தப் படங்களிலிருந்து உருவங்களை வெட்டியெடுத்து ஒருவருக்கொருவர் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டார்கள். தாம் இறுதியாக அமைக்க வேண்டிய வர்ண சித்திரத்தின் அமைப்பை அவர்களே இதன் மூலம் தீர்மானித்துக்கொள்ள முடிந்தது.

வர்ண சித்திரத்துக்குத் தேவையான பொருள்களையும் குழந்தைகளே தேர்ந்து கொண்டார்கள். வர்ண சித்திரத்தின் அந்தப் பகுதிகளில் உரிய துண்டுகளை வைத்து ஒட்டினார்கள் இந்த மாதிரி ஒவ்வொரு மூலைமுடுக்கும் நிரப்பப்பட்டது. இறுதியில் வர்ணக் கண்ணாடித் துண்டுகளிலிருந்தும், முத்துக்கள்மணிகள் முதலியவற்றிலிருந்தும்ஓர் அற்புதமானவர்ண சித்திரம் உருவாயிற்று.

ஆசிரியரின் நோக்குடன் பார்க்கும்போது இந்த மாதிரிப் பரிசோதனை மிகவும் உபயோகமானது என்பது புலனாகும். இதன் மூலம் குழந்தைகளின் கற்பனைத் திறனும் தைரியமும் வளர்ச்சியடைகிறது. இதற்கு, குழந்தைகளிடையே கூட்டுறவு அவசியமாதலால், குழுவாகச் சேர்ந்து செயலாற்றும் பயிற்சி குழந்தைகளுக்கு ஏற்படுகிறது. தம்மால் ஒரு பொருளைப் படைக்க முடிகிறது என்ற உணர்வும், தாம் செய்து முடித்த பொருளை தினமும் பார்ப்பதால் ஏற்படும் ஓர் இடைவிடாத திருப்தியும் குழந்தைகளிடையே தன்னம்பிக்கையை வளர்க்கிறது.

கூட்டு முயற்சியால் உருவாகியுள்ள இந்த வர்ண சித்திரம் குழந்தைகளுக்கு மட்டுமின்றிப் பெரியோருக்கும் மகிழ்ச்சியூட்டுகிறது. நூற்றுக்கணக்கான கண்ணாடித் துண்டுகளையும் மணிகளையும் கொண்டுபள்ளிக்கூடத்து விளையாட்டறையில் 3 அடி அகலத்துக்கு பள்ளிக்கூடச் சுவரை வர்ணமாக்கியிருக்கிறார்கள்.

------

## வெசாக் கார்டுகள் விரைவில் விநியோக்க ஏற்பாடு

கொழும்பு, புதன்

இவ்வருடத்தில் வெசாக் வாழ்த்துக் கார்டுகளையும் கடிதங்களையும் விரைவில் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை பதில் போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் திரு. சிவப்பிரகாசம் மேற்கொண்டுள்ளார்.

ஒவ்வொரு தபால் கந்தோருக்கும் நூற்றுக்கு மேற்பட்ட வெசாக் வாழ்த்துக் கடிதங்கள் இருந்தால் அவற்றை, வேறு பைகளில் இட்டு "வெசாக் கொழும்பு", "வெசாக் காலி" என்றிவ்வாறு பெயரிட்டு அனுப்பப்படும். இப்படிச் செய்வதனால் தபால் ஊழியர்கள் கடிதங்களை விரைவில் விநியோகிக்க முடியும் எனக் கருதப்படுகின்றது.

வெசாக் காலங்களில் நிறையும் அதிக தொகையான கடிதங்களை விநியோகம் செய்வதற்கு தபால் ஊழியர்களுக்கு உதவுமாறு பொதுமக்களை போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் வேண்டியுள்ளார்.

1. வெசாக் கடிதங்களை நேரத்திற்கு அனுப்புதல்.
2. விலாசங்களை விபரமாகவும், தெளிவாகவும், சரியாகவும் எழுதல்.
3. வேண்டிய முத்திரைகளை ஒட்டுதல்.
4. முத்திரைகளை வலது பக்க மூலையில் ஒட்டுதல்.

ஆகியவற்றை பொதுமக்கள் அவதானமாக செய்வதால் வெசாக் கடிதங்களை விரைவில் விநியோகிப்பதற்கு தபால் ஊழியர்களுக்கு உதவி செய்ய முடியும் என்பதை திரு. சிவப்பிரகாசம் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஒருஅவுன்சுக்குக் குறைவான வாழ்த்துக்கடிதங்கள் உறையுள் மூடப்பட்டாலும் சரி, மூடாவிட்டாலும் சரி பத்துச் சத முத்திரை ஒட்டப்பட வேண்டும் என்பதையும் அவர் மக்களுக்கு ஞாபகப்படுத்தியுள்ளார்.

## இந்து சன்மார்க்க சங்கம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண இந்து சன்மார்க்க சங்கத்தின் எட்டாவது ஆண்டுவிழா செப்பல் வீதியிலுள்ள திரு. க. சதாசிவத்தின் இல்லத்தில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கிறது. திரு. எஸ். யூ சோமசேகரம் உரை நிகழ்த்துவார். கூட்டுப் பிரார்த்தனையும் நடைபெறும்.

## ஐயாறன் எழுதுவது

இலங்கை ரயில்வேயில் வேலை பார்க்கும் ஒரு தமிழ் அதிகாரி, சமீபத்தில தென்னிந்தியாவுக்குக் குடும்பத்துடன் யாத்திரை சென்று திரும்பினார். திருச்செந்தூர், கன்யாகுமரி, திருவனந்தபுரம், மதுரை, பழனி, குற்றாலம், மைசூர், முதலிய பல்வேறு இடங்களுக்கும் சென்று தரிசித்ததாயும். அங்கிருந்து இலங்கைக்குத் திரும்பி வரவே மனமில்லை என்றும் சொன்னார்.

ரயில்வே அதிகாரியென்றால், இலங்கை மட்டுமல்ல, இந்தியா முதலிய வேறு நாடுகளிலும் எங்கும் இலவசமாகப் பிரயாணம் செய்யலாமாம். முதல் வகுப்பில் ஒரு அறையை ரிசர்வ் செய்திருந்தாராம். ரயில்வே ஊழியருக்கு இந்த விசேஷ சலுகையுண்டு. அதிர்ஷ்டக்காரர்களல்லவா!

வட இந்தியாவுக்கும் குடும்பத்துடன் இலவசமாக யாத்திரை செய்ய வசதியிருந்தும், அவர் அங்கு செல்ல விரும்பவில்லை. வட இந்தியாவிலே சமாதிகளைத்தான் பார்க்க வேண்டுமென்றும், தென்னகத்திலேதான் கலைக் கோவில்கள் கொஞ்சுவதாகவும், எவ்வளவு தடவை அங்கு சென்று பார்த்தாலும் சலிக்காதென்றும் கூறினார். உண்மைதான்.

* * *

வட இந்தியாவிலே பல இடங்களிலும், இந்திய அரசாங்கத்தின் அழைப்பின்மீது சுற்றினேனல்லவா! அங்கு புராதன கலைச்செல்வங்கள்எதுவும் பார்ப்பதற்கில்லை. தாஜ்மகால் உள்ளதுதான். அது ஒரு சமாதி. அஜந்தா, எல்லோரா சிற்பச் செல்வங்கள் அவசியம் காண வேண்டியவை. அதிலும் கைலாச நாதர் கோவில் அற்புதமானது. இவை தென்னிந்தியாவைச் சேர்ந்தனவே என்றும் கூறலாம். எப்படியும் இது பாழடைந்து, பூசை முதலியன இன்றி 'மியூஸியம் பொருளாகவே' உள்ளன. ஆனால் தென்னாட்டுக் கலைக் கோவில்கள் உயிருடனிருந்து மக்கள் மனதை வசீகரிப்பதைப் பார்க்கிறோம்.

வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று ஒருகோஷம் எழுந்துள்ளதல்லவா? வடக்கே போய் பல கிராமங்களையும் பார்த்தால், இப்படியான கோஷங்கள் செய்பவர்களும் நிறுத்திக்கொள்வார்கள். மக்கள் உடை முதலியன ஒரே அழுக்கு, ஏழ்மை அதிகம். பல விதங்களில் தெற்கே தேவலாம் என்றே கூறுவேன்.

* * *

பழனியும், திருச்செந்தூரும் தம்மைப் பெரிதும் கவர்ந்து விட்டதாகக் கூறுகிறார் அந்த ரயில்வே அன்பர். அவருக்கு முதுகில் ஒருவித வலி இருந்ததாம். எவ்வளவோ சிகிச்சை செய்தும் அது மாறவில்லை. பழனியில் ஸ்நானம் செய்து, கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்ததும் அந்த வலி எப்படியோ மறைந்துவிட்டதாகத் தெரிவித்தார். ஒருவருக்கு குன்மமெனும் வயிற்று நோய் கடுமையாக இருந்ததாம். பழனிக்குச் சென்று ஒரு மாதம் தரிசித்ததில், அது தீர்ந்துவிட்டதாம். இப்படிப் பல கதைகளைச் சொன்னார்.

"குற்றாலத்துறை கூத்தனல்லால் நமக்கு உற்றார் யாருளரோ?" என்று அப்பர் சுவாமிகள் பாடியுள்ளாரல்லவா? அந்தக் குற்றாலத்திலே நான்கு நாளிருந்ததாயும் கோவில் சுவர்களில், ஸ்தலத்தைப்பற்றி தேவார திருமுறைப் பாடல்கள் தெளிவாக எழுதப்பட்டுள்ளதாயும், இயற்கை அழகு கொஞ்சும் அந்த இடத்தை பல மக்கள் அசுத்தப்படுத்தி, சுகாதாரத்துக்கு மாறாகச் செய்வதாகவும் சொன்னார்.

பழனிக்கும் கோயம்புத்தூருக்குமிடையே ரயிலின் இருபுறமும் திராட்சை, ஆரஞ்சு,

(5ம் பக்கம் பார்க்க)

# வழக்கறிஞர் - பொலிஸ் இன்ஸ்பெக்டர் மோதல்!

## உடுவில் கொலை வழக்கு விசாரணையில்!

தெல்லிப்பழை, புதன் உடுவிலைச் சேர்ந்த என். மாணிக்கம் என்பவரைத் தீட்டுத்தடியால் தாக்கிக் கொலை செய்ததாக அதேகிராமத்தைச் சேர்ந்த பொன்னன் இராசையா என்பவர்மீது சுன்னுகம் பொலிசாரால் குற்றம் சாட்டி மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்ட போது பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கும் வழக்கறிஞருக்குமிடையே மோதல் ஏற்பட்டது. வழக்காளிதரப்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. எஸ். நடராசா நீதிபதியிடம் தான் திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் உதவியுடன் இவ் வழக்கை நடத்த ஆஜராகியிருப்பதாகக் கூறினர்.

அப்போது சுன்னுகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எக்கநாயக்கா, "வழக்கறிஞர் திரு. எஸ். நடராசா இந்த வழக்கினை நடத்துவதை நான் ஆட்சேபிக்கின்றேன் இந்த வழக்கை நானே நடத்த விரும்புகின்றேன். விஷயம் தெரியாமல் வழக்கை நடத்துவதினல் வழக்காளிபக்கத்தில் பாதகம் ஏற்படும். எனவேதான் நான் இந்த வழக்கை நடத்த விரும்புகிறேன்"என்று கூறினர்.

திரு. நடராசா: "எனது 25 வருட வழக்கறிஞர் சேவையில் இவ்விதநிலை தோன்றியதில்லை. இன்ஸ்பெக்டர் சட்டம் தெரியாமல் பேசி மன வேதனையடையக்கூடியநிலையை ஏற்படுத்தக்கூடாது. நான் வழக்காளிதரப்பில் ஊதியம்பெற்று வழக்காளியின் நலனைப் பாதுகாப்பதற்காக வாதாடாமல் பொலிசாருக்கு அருகில் இருக்க விரும்பவில்லை. இது வழக்கறிஞர் தொழிலுக்கே கூடாது. இந்த வழக்குப்போன்ற 'நொன் சமறி, வழக்குகளை விசாரிப்பது மாஜிஸ்டிரேட்டாகும்.அவர் இத்தகைய வழக்கு விசாரணைகளை சுமுகமாக நடத்துவதற்கு அரசாங்க ஊழியரையோ, வழக்கறிஞரையோ உதவிபுரிய அழைக்கலாம். ஆகவே இந்தப் பிரச்னையிலும் நீதிபதி பொலிசாரோ அன்றி நானே வழக்கை நடத்துவதென்று தீர்மானித்துக் கூறினல் அதனை நான் ஏற்றுக்கொள்கிறேன்".

நீதிபதி இன்ஸ்பெக்டரின் ஆட்சேபனையை நிராகரித்து திரு. நடராசாவை திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் வழக்கை நடத்துமாறு கூறினர். திரு. நடராசா வழக்கை நடத்துவதன்முன் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எக்கநாயக்காவிடம் வழக்கில் சம்பந்தப்பட்ட வாய் முறைப்பாடு பதிவுசெய்யும் புத்தகத்தைத் தருமாறு கேட்டார். இதற்கு இன்ஸ்பெக்டர் மறுத்தார். உடனே திரு. நடராசா நீதிபதியிடம், காங்கேசன்துறை பொலிஸ உதவி சுப்பிரிண்டன்டை உத்தரவு அனுப்பி வரவழைத்து இந்த வழக்கு சம்பந்தப்பட்ட 'வாய் முறைப்பாடு' பதிவுப்புத்தகத்தை தரவகை செய்யுமாறு உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மாஜிஸ்டிரேட் 'வாய் முறைப்பாடு' பதிவுப் புத்தகத்தை திரு. நடராசாவிடம் வழங்குமாறு இன்ஸ்பெக்டருக்கு உத்தரவிட்டார்.

இன்ஸ்பெக்டர் தான் அப்பதிவுப் புத்தகத்தைக் கோர்ட்டுக்குக்கொண்டுவரவில்லையென்றும் அதன்நகல்தார் இருப்பதாகவும் கூறி நகல் பிரதியை நீதிபதியிடம் சமர்பித்தார். நீதிபதி அதனைப் பெற்று திரு. நடராசாவிடம் வழங்கியபின் வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெற்றது.

வழக்கு விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டபோது கொலையைப் பார்த்ததாகக் கூறப்படும் மணவியான ஏழு வயதுச் சிறுமி சாட்சியமளித்தார்.

மாணவி ஜேக்கப் அருளம்மா சாட்சிய மளிக்கையில் கூறியதாவது:-

எதிரியான இராசையா ஒரு தீட்டுத்தடியால் எனது பேரனரின் தலையில் தாக்கியதனையும், பேரனர் முகம் குப்புறக் கீழே விழுந்ததனையும் கண்டேன். உடனே வீட்டுக்கு ஓடிப்போய் அம்மாவிடம் நான் கண்ட சம்பவத்தைச் சொன்னேன். அம்மா அவ்விடம் சென்றர். காலஞ்சென்றவர் கையில் கத்தி வைத்திருந்ததையோ அல்லது பக்கத்தில் இருந்ததையே நான் காணவில்லை."

உடுவிலைச் சேர்ந்த யேக்கப்பின் மனைவி எலிஸபெத் சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டதாவது:- எனது மகள் அருளம்மா சொன்ன தகவலைத் தொடர்ந்து ஸ்தலத்திற்கு விரைந்தேன். நான் போகும்போது எதிரியான இராசையா ஒரு காரில் உட்கார்ந்து செல்வதைக் கண்டேன். ஸ்தலத்திற்கு வந்தபோது எனது தந்தை இறந்து கிடந்தார். அவருக்குப் பக்கத்தில் தீட்டுத்தடியோ, கத்தியோ இருக்கவில்லை. எதிரி எனக்கு உறவினர். எனது தந்தைக்கும் எதிரிக்கும் மனஸ்தாபமிருந்தது. எனக்கு ரீத்தா என்னும் தங்கையொருத்தி உண்டு. அவளைத் தனக்குத் திருமணம் செய்து வைக்கும்படி எதிரி எனது தந்தையைக் கேட்டார். இதற்கு எனது தந்தை மறுத்தார். எனது தங்கை வேறு ஒருவரைத் திருமணஞ் செய்து கொண்ட அதே தினத்தில் எதிரியும் வேறு ஒரு பெண்ணைத் திருமணஞ் செய்து கொண்டார். அன்று தொடங்கி எனது தந்தைக்கும் எதிரிக்கும் மனஸ்தாபமிருந்து வந்தது."

டாக்டர் எஸ். இராஜசூரியர் பொன்னர். அப்பையா, கான்ஸ்டபிள் கல்கொட ஆராச்சி ஆகியோர் சாட்சியமளித்தபின் மேல் விசாரணையை இம்மாதம் பன்னிரண்டாம் திகதி வரை மாஜிஸ்டிரேட் ஒத்திவைத்தார்.

திரு. வி. செல்வத்துரையின் அனுசரணையுடன் திரு. ஆர். கண்ணுத்துரை எதிரி தரப்பில் ஆஜரானர்.

---

## கவின் கலை மன்றம்

மட்டக்களப்பு, புதன்

"கிராமப் புறங்களிலுள்ள கலாசாரப் பண்புகளைப் பாதுகாப்பதற்கும் நாட்டுக் கூத்து முதலிய பரம்பரைக் கலைகளை வளர்ப்பதற்கும் கிராமங்கள் தோறும் கலாமன்றங்கள் தோன்றவேண்டியது அவசியம். படித்த வாலிபர்களும், பணம் படைத்த பெரியோர்களும் இத்தகைய முயற்சிகளுக்கு ஆதரவளிக்கவேண்டியது அவசியம்."

ஆரயம்பதி கவின் கலை மன்ற அங்குரார்ப்பண வைபவத்திற்குத் தலைமை தாங்கிய திரு. மு. கணபதிப்பிள்ளை ஆசிரியர் தமது தலைமையுரையில் மேற்கண்டவாறு கூறினர். மற்றும் மு. பரசுராமன், ந. தம்பிப்பிள்ளை ஆகியோரும் கலைமன்றத்தின் அவசியம் பற்றிப் பேசினர்.

கலையை வளர்ப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ள ஆரயம்பதி கவின் கலை மன்ற உத்தியோகஸ்தராகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. மு. கணபதிப்பிள்ளை ஆசிரியர், உபதலைவர்: திரு. ந. தம்பிப்பிள்ளை ஆசிரியர், செயலாளர்: திரு. இரா. நாகலிங்கம், உதவிச் செயலாளர்: திரு. த. தங்கவடிவேல், பொருளாளர்: திரு மு. பரசுராமன் ஆசிரியர்

---

## கடன்வசதி அவசியம்!

கொழும்பு, புதன்

கம்பனிகளின் கீழ் இயங்கும்பொழுது அனுமதிக்கப்பட்ட கடன்வசதிகள் இப்பொழுது அளிக்கப்படாவிட்டால் விற்பனை வெகுவாகப் பாதிக்கப்படும் என்பதை தற்பொழுது இலங்கை பெட்ரோலியம் கார்பரேஷனுக்குக் கீழ் இயங்கும் எண்ணை விற்பனையாளர்கள், கார்ப்பரேஷனிடம் தெரிவித்துள்ளனர். கம்பெனிகள் முன்னர் தமக்கு ஒரு மாதத்திற்குப் பின் திருப்பிக் கொடுக்கக்கூடிய வகையில் கடன் கொடுத்தன எனவும், இப்பொழுது ஒரு வாரத்திற்கு மட்டுமே கடன்கொடுக்கப்படுகின்றது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனல் முன்பிருந்த வாடிக்கைக்காரர்களுக்கு தம்மால் எண்ணை விநியோகம் செய்ய முடியவில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

---

## வயோதிபர் விடுதிச்சாலை ஒழிக்கப் படவேண்டும்

### டாக்டர் கருணாரத்ன கருத்து

மஹாரகம, புதன்

'வயோதிபர்களுக்கென விடுதிச்சாலைகள் இருப்பது பௌத்த மத வாழ்க்கைக்கு முரண்பட்டதாக இருக்கின்றது' என பேராதனை சர்வகலாசாலையில் பௌத்த மத நாகரிக விரிவுரையாளராக விருக்கும் டாக்டர் டபிள்யு. எஸ். கருணாரத்ன, பெபிலவானவிலுள்ள சுனித்திரா தேவி ஞாயிறு பாடசாலையில் நடைபெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

வித்தியாலங்கார சர்வகலாசாலையின் உப அத்தியட்சகர் வண. கிரிவத்துடுவா பிரக்ன சேகரா நாயக்க தேரோ தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் டாக்டர் கருணாரத்ன மேலும் கூறியதாவது:-

இங்கிலாந்திலும் ஏனைய மேல் நாடுகளிலுமுள்ளவர்கள் தமது வயோதிப பெற்றோர்களை வீட்டில் வைத்திருப்பது தமக்குப் பெரிய தொல்லையாக விருக்குமெனக் கருதுகிறார்கள். இதனல் மேலும் மேலும் புதிய வயோதிப விடுதிச்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையிலுள்ள பௌத்த மதத்தலைவர்களாகிய நாம், இறக்கும் வரை நமது பெற்றோரைப் பேணிக்காப்பது நமது முக்கிய கடமை எனக் கருதுகிறோம். பௌத்தர்களாகிய எம்மில் சிலர் தமது பெற்றோர்களைப் பேணுவதில் அக்கறை காட்டாது விட்டுவிடுவதால் தான் இங்கும் மேலும் மேலும் வயோதிப விடுதிச்சாலைகள் திறக்கப்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பௌத்த சமயக் குருமார்களை சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுப்பது வருத்ததுக்குரியதொன்று. இவர்களைக் கட்டுப்படுத்துவதை விடுத்து மகாசங்கத்தின் அலோசனையைக் கேட்டு அரசாங்கம் கருமமாற்றவேண்டும்.

கிராமத்தில் நல்ல முறையில் வளர்க்கப்படும் மாணவர்களிற் பலர் சர்வகலாசாலைக்கு வந்ததும் இங்குள்ள தேவையற்ற பழக்க வழக்கங்களைப் பழகிக்கொள்கிறார்கள்.

தமது வயோதிப பெற்றோருடன் நகரத்துக்குப்போவதற்கு சில சர்வகலாசாலை மாணவர்கள் பிரியப்படுவதில்லை.

---

# இந்திய தி. மு. க. வுடன் தொடர்பு கிடையாது

## இலங்கை தி. மு. க. செயலாளர் விளக்கம்

கொழும்பு, செவ்வாய்

"இலங்கையிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் தென் இந்தியாவிலுள்ள தி. மு. க.வுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது" என இலங்கைத் தி. மு. க. பொதுச் செயலாளர் திரு. ஏ. இளஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தி. மு. க. பற்றியும் அதன் கொள்கைபற்றியும் தவரான கருத்துக்கள் பரப்பப்பட்டு வருவதாலும் அரசியல் வட்டாரங்களில் இதுவிஷயமே இப்பொழுது அதிகமாகப் பேசப்பட்டு வருவதாலும் தாம் இதுபற்றி விளக்கவேண்டியுள்ளதென அவர் குறுப்பிட்டு மேலும் தெரிவித்துளதாவது:

எமது கழகம் இலங்கையில் நிரந்தரவாசிகளான தமிழ் பேசும் மக்களின் நலன் குறித்தும் அவர்களின் முன்னேற்றம் கருதியும் உழைக்கவே இயங்கி வருகிறது.

மலை நாட்டுத் தமிழரின் நன்மை குறித்துப் பாடுபடுவதாகக் கூறிக்கொள்ளும் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ, ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ ஆகிய இரு கட்சிகளின் அரசியல் தொழில் சங்க நடவடிக்கைகளை நாம் பல காலமாக அவதானித்து வந்துளளோம். இதுவரை காலமாக இந்த சமூகம் அனுபவித்துவரும் பெரும் கஷ்டத்தையோ சட்டரீதியாக இழைக்கப்பட்டிருக்கும் அநீதியையோ நிவிர்த்தி செய்ய இரு கட்சிகளும் தகுந்த நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லையென்றே கூறவேண்டும். 1948-ம் வருடத்திலும், 1951-ம் வருடத்திலும் இந்த சமூகத்தினருக்கு பிரஜாவுரிமை அநீதியான முறையில் மறுக்கப்பட்டது. பிரிட்டிஷாரின் ஆட்சிக்காலத்தில் 25 வருட காலமாக இருந்துவந்த வாக்குரிமை இப்பொழுது மறுக்கப்பட்டுள்ளது. இந்த சமூகத்தினர் 'நாடற்றவர்கள்' ன ஒதுக்கப்பட்டுள்ளனர். இந்தசமூகத்தினரில் 70 சதவீதத்தினர் இலங்கையிலேயேபிறந்தவர்கள் என அரசாங்கத்தின் மதிப்பீட்டிலாகாவின் மதிப்பீட்டின்படி தெரியவந்தாலும் இந்தவித நிலை இவர்களுக்கு ஏற்பட்டுள்ளது, இலங்கையில் பிறந்த தமிழ்த் தொழிலாளர்களில் 50 சத விகிதத்தினரின் இரண்டாவது மூன்ருவது சந்ததியினரெல்லாம் இங்கேயே பிறந்துள்ளார்கள். மிகுதி 30 சத வீதத்தினரில் (இலங்கையில் பிறக்காதவர்கள்) ஒருவராவது 1939-ம் வருடத்திற்குப் பின்னர் இங்கு வந்தவர்களல்ல. (அதாவது 23 வருடங்களாக இங்கு வசித்து வருபவர்கள்) இதில் அரைவாசிப் பகுதியினர் 40 வருடங்களுக்கு மேலாக இங்கு வசித்து வந்துள்ளார்கள். இவர்களுக்கு இங்கு பிறந்த பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும், பூட்டப்பிள்ளைகளும் உண்டு. இத்தகைய ஒரு சமூகத்தினரை நாடற்றவர்கள் எனக் கூறுவது மிகவும் கொடுமையாக இருக்கிறது. சட்டப்படி இவர்களை 'நாடற்றவர்கள் என ஒதுக்குவது சர்வதேச கொலைகுற்றத்திற்கு ஒப்பாகும்.

இந்த நாடற்றவர் என்ற அவமானப் பெயர் விலக்கப்பட வேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டுள்ளது. ஆனல் இதுகுறித்து இ. தொ. காங்கிரஸோ ஜ. தொ. காங்கிரஸோ எதுவித கவலைப்பட்டதாகவும் தெரியவில்லை இந்த இரு கட்சிகளும் தொழிலாளர் நலன் குறித்து அதிகம் பாடுபடவில்லை.

இலங்கைத் தமிழரசுக்கட்சி ஆரம்பகாலம் தொடங்கியே மலைநாட்டுத் தமிழரின் நலனை குறித்துப் பாடுபட்டதோடு வடக்கு கிழக்கு பகுதிகளிலுள்ள தமிழர்களை மலைநாட்டுப்பகுதி மக்களுடன் ஒற்றுமைப்படுத்த முயற்சி எடுத்துவந்துள்ளது. இதுதான் எமது கழகத்தின் நோக்கமும்கூட.

நாம் தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்து ஒத்துழைத்து மலைநாட்டுத் தமிழர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க தீர்மானித்துள்ளோம். சிங்கள, தமிழ், முஸலிம் மக்களை இது விஷயத்தில் போதிய ஒத்துழைப்புத் தரும்படி கோருகிறோம்.

---

ஆசிரியருக்குக் கடிதம்

## அனுட்டான முறையான சமயக்கல்வி

வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெற்ற அகில இலங்கைச் சைவப்புலவர் சமயக்கல்வி மகாநாட்டில் உதவி வித்தியாதிகாரிக்கு ஒரு விண்ணப்பம் சமர்ப்பிக்கபபட்டது. சமயக்கல்வி வெறும் புத்தகப் படிப்புடன் அமைந்து விட்டால் அது மாணவர்களுக்கு வேண்டிய நன்மையைப் பயக்காது. சமயக்கல்விக்குச் சாதனை இன்றியமையாதது. மாணவர்கள் சமயதீட்சை பெற்றுத் தினமும் சந்தியாவந்தனம் புரிந்து பஞ்சாட்சர செபம் செய்ய வேண்டும்.பஞ்சாட்சரம் மந்திரங்களுள் சிறந்தது, நான்கு வேதங்களுடைய மெய்ப்பொருளாகவுள்ளது. அதனை ஓதுகின்றவர்கள் இம்மையின்பத்தையும் மறுமையின்பத்தையும் பெறுவார்கள். ஞானமடைதற்கு அதனிலும் பார்க்க மேலான சாதனமொன்றில்லை. என்று வலியுறுத்தினர் திரு. சே. பி. ஹரன்.

ஆகையினல் உதவி வித்தியாதிகாரி வித்தியாசாலைகளில் கல்விபயிலும் சைவமாணவர்கள் சமயதீட்சை பெற வேண்டுமென்ற ஒரு நிபந்தனையை ஆக்கித் தருவாராயின் அது சைவ சமய வளர்ச்சிக்கு உறுதுணையாக விருக்கும். இதனேடு வித்தியாசாலைகளில் கல்வி கற்பிக்கும் சைவாசிரியர்களும் சமய தீட்சை பெற்று சமயாநுட்டானம் புரிந்து வரக்கூடிய ஒழுங்குகளையும் செய்து தரல் வேண்டும்.

மு. மயில்வாகனம்.
சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலனசபை

---

## ஐயாறன்

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

மா முதலிய பழத் தோட்டங்கள். ஒரு ராத்தல் திராட்சை 25 சதம் தானும்! பழமே சாப்பிட்டு இருக்கலாமென்கிறார் அன்பர். இதையெல்லாம் கேட்கும்போது. அங்கே பறந்து போய்விடலாமென்று தோன்றியது. ஆனல் நமது காருண்ய அரசாங்கம் அனுமதிக்குமா? இன்னும் ஏழு வருடங்களுக்கு அனுமதிக்காதென்கிறார் நண்பர். ஏதோ பார்க்கலாம்.

* * *

திருகு சிந்தையைத் தீர்த்துச்
செம்மை செய்து
பருகி ஊறலைப்பற்றிப்
பதமறிந்து
உருகிலைபவர்க்கு ஊன
மொன்றின்றியே
அருகு நின்றிடும் ஆனைக்கா
அண்ணலே

— திருநாவுக்கரசர்

# வெளிநாட்டவரின் பாராட்டையும் பெறும் "கொஞ்சும் சலங்கை"

"தலைசிறந்த கலைஞர்கள் தங்கள் ஒப்புயர்வற்ற ஆற்றலை வெளிப்படுத்தியுள்ள 'கொஞ்சும் சலங்கை' அயல் நாட்டினரின் மதிப்பையும் பாராட்டுதலையும் "நிச்சயம் பெறும்" என்று தமிழ்நாடு நிதியமைச்சர் ஸ்ரீ எம். பக்தவத்சலம் கூறினுர்.

ராமன் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பும், தேவி பிலிம்ஸ் வெளியிடுமான "கொஞ்சும் சலங்கை" படத்தின் 100-ம் நாள் விழா ஸ்ரீ எம். பக்தவத்சலம் தலைமையில் சமீபத்தில் விஜய தோட்டத்தில் நடைபெற்றது. அவ்வமயம் நிதி அமைச்சர் இவ்வாறு கூறினுர்.

## பொருத்தமான பெயர்

அவர் மேலும் பேசுகையில் "படத்திற்கு கொஞ்சும் சலங்கை என்ற பெயர் கொடுத்திருப்பது மிகவும் பொருத்தமேயாகும். தலைப்பே படத்தின் சிறப்பை ரசிகர்களுக்கு எடுத்துக்காட்டுகிறது. நம் நாட்டினர் பெருமையை மற்றவர்கள் உணரக்கூடிய வகையில் பல காட்சிகள் உள்ளன. அதே சமயத்தில் சாதாரண பொது மக்கள் பராட்டுதலைப் பெறக்கூடிய அம்சங்களும் நிறைந்துள்ளன. குறிப்பாக ஜெமினி கணேசன் நாதஸ்வரம் வாசிப்பதுபோல் நடிப்பது எனனை மிகவும் கவர்ந்தது" என்றுர்.

தேநீர் விருந்துடன் துவங்கிய இந்த விழாவில், அயல் நாட்டில் திரையிடுவதற்காக வெட்டி ஒட்டப்பட்டுள்ள குறுகிய "கொஞ்சும் சலங்கை" படம் திரையிடபட்டது.

படத்தின் இடைவேளையில் ஸ்ரீமதி கமலாவின் இறைவணக்கத்துடன் துவங்கிய பாராட்டு விழாவில் தேவி பிலிம்ஸைச் சேர்ந்த ஸ்ரீ ராஜகோபால் செட்டியார் அனைவரையும் வரவேற்றுர்.

தலைவரின் உரைக்குப் பிறகு பேசிய ஸ்ரீமதி சௌந்தரம் கைலாசம், "சுவைமிக்க கலை உணவான 'கொஞ்சும் சலங்கை' படம் அனைவருடைய உள்ளப் பசியை நீக்கிற்று" என்றுர்.

## வெள்ளி நாதஸ்வரம்

பிறகு அவர் "கொஞ்சும் சலங்கை" கலைஞர்களுக்கும், நடிகர்களுக்கும் வெள்ளிக் குத்துவிளக்குகளைப் பரிசாக வழங்கினுர். ஜெமினி கணேசனுக்கு வெள்ளி நாதஸ்வரம் பரிசாக வழங்கப்பட்டது.

பரிசளிப்பிற்குப்பிறகு பேசிய படத்தின் தயாரிப்பாளர் ஸ்ரீ எம். வி. ராமன், அயல் நாட்டினர் நம் கலையை அறிந்துகொள்ளவேண்டியே இப்படத்தைத் தயாரித்ததாகக் கூறினுர்.

ஜெமினி கணேசன் பேசுகையில் ஐந்தாண்டுகளாகத் தயாரிப்பிலுள்ள ஒரு படம் சம்பந்தப்பட்ட சிரமங்களைக் குறிப்பிட்டார்.

அடுத்து பேசிய ஸ்ரீமதி சாவித்திரி கணேஷ் தம்முடைய 100-வது படம் 100 நாள் ஓடியதைக் குறிப்பிட்டார்.

ஸ்ரீமதி கமலா பேசுகையில், "வெளிநாடுகளில் பரதக் கலையைப் பரப்ப உதவும் படம் இது" என்று கூறினுர்.

ஸ்ரீ கோவிந்தராஜுலு செட்டியார் நன்றி கூறியபின் படத்தின் இரண்டாவது பகுதி திரையிடப்பட்டது.

நாடகம்

# இரு மேதாவிகள்

விமர்சனம்



ராம் சுந்தா

கிச்சு, சச்சு என்ற இருவர் தாம் தெரிந்தோதெரியாமலோ சில தவறுகளைச் செய்துவிடுகிருர்கள். இதன் பலனுக அவர்களே சிலவேளைகளில் மாட்டிக் கொள்ளுகிருர்கள். எனினும் முடிவு அவர்கள் 'மேதாவிகள்' தான் என்பதை ஒப்புக்கொள்ளச் செய்கிறது.

கொழும்பு அமெச்சூர் நாடகக்குழுவினர் சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி திறந்த வெளியரங்கில் நடித்த நாடகத்தின் கரு இதுதான். ஆனல் சுமார் இரண்டரை மணித்தியாலங்களுள் ரசிகர்கள் எத்தனை தடவை கதிரைகளை விட்டு எழும்பிச் சிரித்தார்களோ என்பது கணக்கிட முடியாது!

கிச்சுவரக வந்த ராம்சுந்தர் ரசிகர்களைக் 'கிச்சுக்காட்டினுர்' என்று சொல்லிவிடலாம். பாரிஸ் அழகு வனிதையாக வந்து நடைடயின்றபோதும், டைரக்டரிடம் சென்று தமது நடிப்பின் திறனைக் காட்டிய போதும், பொலிஸ் இன்ஸ்பெக்டரிடம் 'கசிப்பு' வழங்கிய போதும் ரசிகர்கள் எழுந்து சிரித்துவிட்டு சீட்மாறியே உட்காரவேண்டிய நெருக்கடி ஏற்பட்டது.

சச்சுவாக நடித்த ஜோக்கீம் பர்னுந்து அவரது அழகான தாடிமீசையுடன் அழகாக நடித்தார். அனர்க்கலி நாடகத்தை (சலீமாக) டைரக்டருக்கு நடித்துக்காட்டியபோது அனர்க்கலியில் போய் மோதினுரே அது நகைச்சுவை நாடகத்தில் சோகக்கட்டத்தையும் சிரிக்கும் கட்டமாக மாற்றலாம் என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டு.

கிழவராக வந்த பி. என். இராமச்சந்திரன் அசல் கிழவனைவே பேசி நடித்தார். உரத்த குரலும், கடுகடுப்பும், சில வேளைகளில் இரக்கம் காட்டுவதும், நாசூக்காக தற்கால நாகரிகத்தைக் 'கழட்டுவதும்' நன்ருகச் செய்தார். 'ஆயிரம் ரூபாய் தருவேன்' என்றதும் வாயைப் பிழந்தவர்களிடம் 'ஆனல் இப்பொழுது என்னிடம் காசு கைவசமில்லை' என்று அவர் கூறியது நினைவில் நிற்கிறது.

'திரிபுரசுந்தரியாக நடித்தவர் ஆணு? பெண்ணு?' இந்தக் கேள்விக்கான விடை நாடகம் முடிந்தபின்னும் பலர் அறிந்து கொள்ளவில்லை. எஸ். மோகனதாஸுக்கு நல்ல வேஷப் பொருத்தம். குரலும் நடிப்பும் குறிப்பாக சித்தசுவாதீனமற்ற நிலையைச் சித்தரித்தபோது நன்ருகவிருந்தது.

மணியாக வந்த பி. சந்திரசேகரனின் நடிப்பு மணியாக இருந்தது. சுறுசுறுப்பு சிறிது குறைந்தால் நடிப்பில் இன்னும் விறுவிறுப்பு இருக்கும்!

இன்ஸ்பெக்டர் உத்தியோகத்தில் இருக்கிறுரா எஸ். நாகேந்திரன்? அப்படியென்ருல் இவரால் சமுகத்துக்கு மிக நல்ல உதவி இருக்கும். வெறும் நடிப்புக்காக மட்டும் தான் இந்த வேஷம் என்ருல் அவரை உண்மை இன்ஸ்பெக்டர் என்றுநினைத்து ஏமார்ந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்க வேண்டியது தான். வேஷமும் நடிப்பும் நன்ருக இருந்தன.

டைரக்டர் ஜம்பு முன்னேற இடமிருக்கிறது. பாபு இராஜேந்திரன் டைரக்டராக வருவதைக் காட்டிலும் வடநாட்டுக்காரராக வரும்போது நடிப்பில் முன்னேற்றம் தெரிகிறது,

திரிபுரசுந்தரியின் கணவன் கனகுவாக நடித்த ஜி. சந்திரசேகரனின் நடிப்பு இன்னும் முன்னேற இடம் இருக்கிறது.

குறைகள் இருக்கத்தான் செய்கின்றன. இவற்றைத் தவிர்த்தால் 'இருமேதாவிகள்' எல்லோரது பாராட்டையும் பெறும் என்பது உறுதி.

—கணேஷ்.

# கலை அரங்கம்

## எம். ஜி. ஆருக்கு சிவாஜி கடிதம்

### அமெரிக்காவிலிருந்து எழுதியுள்ளார்



புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரனுக்கு நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நியுயோர்க் நகரிலிருந்து எழுதியுள்ள கடிதத்தில் தமிழ் படங்களை அமெரிகாவில் திடையிடதாம் ஏற்பாடு செய்து வருவதாகவும் இந்தியாவைவிட அமெரிக்காவின் நடிப்பு அதிகமான தென்ருே அற்புதமான தென்ருே கூறமுடியாதென்றும், ஆனல் மேடையமைப்பு, அரங்க அமைப்பு, ஒலி, ஒளி ஆகியவற்றில் அமெரிக்கா பெரிதும் வளர்ந் திருப்பதாகவும் நடிகர் திலகம் தமது கடிதத்தில் குறிப்பிட்டார்.

## 'அன்பே வா'

### ஸ்ரீதர் இயக்குகிருர்

பாட்டுக்களின் முதலடிகளில் இப்பொது படப் பெயர்கள் வரத்தொடங்கியுள்ளன அல்லவா? இந்த ரீதியில்தான் ஸ்ரீதர் வசனமெழுதி டைரக்ட் செய்யும் படத்துக்குப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

சாந்தி மூவிஸார் "தலாக்" (மணவிளக்கு) இந்திப் படத்தை அடிப்படையாக வைத்து இதைத் தயாரிக்கிருர்கள்.

இப்படத்தில் ஜெமினி கணேசன், தேவிகா, ரங்கராவ் ஆகியோர் நடிக்கிருர்கள்.

பாடல்களை கண்ணதாசன் இயற்ற விசுவநாதன் - இராமமூர்த்தி இசையமைப்பாளர்களாம்.

## இசை, நடன வகுப்புகள்

பருத்தித்துறை, புதன் வாணி கலைக்கழகம் இசை, நடன வகுப்புகளை விரைவில் ஆரம்பித்து நடத்துவதென நேற்றையதினம் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் முடிவு செய்தது.

திரு. வி. தங்கராசா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கழகப் பழைய மாணவர் சங்கமொன்றை இம்மாதம் 19-ம் திகதி காலை அங்குரார்ப்பணம் செய்துவைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## இவர்கள் கருத்து

### படித்தவர்கள் வேண்டுமா?

#### எம். ஜி. ஆரும் ஸ்ரீதரும்

நடிப்பே தொழிலாகக் கொண்டு அதையே பிழைப்பாகக் கருதியிருக்கும் ஆயிரக்கணக்கான பேர்கள் இருக்கிருர்கள். அவர்களில் அழகும் திறமையும் மிகுந்தவர்கள் ஏராளமானேர் இருக்கின்றனர். இவர்களே வேலையில்லாமல் திண்டாடும்போது படித்து வேறு வேலைகளுக்கு சென்று பணியாற்றக் கூடிய யோக்கியதைப் பெற்றவர்களை சினிமா உலகிற்கு கொண்டு வந்து பாழ்படுத்துவது கூடாது.

—எம். ஜி. ஆர்.

என் கேள்வி படித்தவர்கள் ஏன் சினிமா உலகுக்கு வரக் கூடாது என்பதுதான்.

எனக்கு படித்தவர்களை வைத்துவேலைவாங்க மகிழ்ச்சியாக இருக்கிறது.

இதனல் நான் என்ன சாதிக்கப் போகிறேன் என்று பலர் கேட்கிருர்கள். இதனல் சினிமாவில் லட்சக்கணக்கில் பணம் கேட்கும் நடிகர்கள் குறைந்து விடுவார்கள். நிறைய நடிகர்கள் வந்தால் ஒரு சிலரையே தயாரிப்பாளர்கள் நம்பியிருக்க வேண்டிய தில்லை.

—ஸ்ரீதர்

## ஸ்ரீதரின் 'நெஞ்சம் மறப்பதில்லை'

'ஸ்ரீதரின் நெஞ்சம் எதை மறபபதில்லை?' கேள்வி இப்படித்தான் எழும். இப்படி ஒரு சமூகச் சித்திரத்தை ஸ்ரீதர் டைரக்ட் செய்து வருகிருர் இதுதான் விஷயம்.

திரைக்கதை வசனத்தை ஸ்ரீதரே எழுதுகிருர்.

கல்யாண்குமார், தேவிகா, நம்பியார், சகஸ்ரநாமம் ஆகியோர் முக்கிய பாகங்களேற்று நடிக்கும் இப்படம், இப்பிறவியில் காதலர்களாக இருப்பவர்கள் முற்பிறவியிலும் காதலர்களாக இருந்ததைச் சுவைபட விளக்குமாம்.

நெப்டியூனில் வளர்ந்து வரும் இப்படம் ஒரு குறுகிய காலத்தயாரிப்பாக இருக்குமாம். கவிஞர் கண்ணதாதன் பாடல்களை இயற்ற விசுவநாதன், இராமமூாத்தி இசை சமைத்துவருகின்றனர்.

## தேவையான நாடகங்கள்

யாழ்ப்பாணம், புதன்

"சமூக நாடகங்களுடன் சரித்திர நாடகங்களையும் நாடக மன்றங்கள் அரங்கேற்றவேண்டும். சரித்திர நாடங்கள்மூலம் மக்களுக்கு எமது பாரம்பரியத்தையும் மொழி, இன அபிமானத்தையும் ஊட்டமுடியும். அத்தகைய நாடகங்கள் இன்று எமக்குத் தேவை."

இவ்வாறு யாழ்ப்பாணம் திருக்குறள் நாடக மன்றத்தின் "புலித்தேவன்" நாடக ஆரம்ப விழாவிற்குத் தலைமைவகித்துப் பேசிய ஆசிரியர் புதுமைலோலன் குறிப்பிட்டார். இந்த ஆரம்ப விழா யாழ்ப்பாணம் 'மலாயா கபே' மேல் மாடியில் நடைபெற்றது. மன்ற அங்கத்தவர்கள் இந்த ஆரம்ப விழாவில் கலந்துகொண்டனர்.

ஆசிரியர் சோ. அமிர்தலிங்கமும் மற்றும் பலரும் பேசினர்.

## தமிழ்நாட்டுபாடசாலைகளுக்கு ரூ.25000 நன்கொடை

### நடிகர் நாகேஸ்வரராவ் அளிப்பார்

பிரபல நடிகர் ஏ. நாகேஸ்வரராவ் தமிழ் நாட்டு பள்ளிகளுக்காக ரூ. 25,000 நன்கொடையளிக்க முடிவுசெய்துள்ளார். தமது 100-வது படமான விஜயா புரொடக்ஷன்ஸ் "மனிதன் மாறவில்லை" படம் வெளியானதும் இத்தொகையை எளிய முறையில் ஏற்பாடு செய்யப்படும் விழா மூலம் வழங்கத் தீர்மானித்துள்ளார். இவ்விழா சினிமாவில் சம்பந்தப்படாத ஒருவர் தலைமையில் நடைபெறுமெனத் தெரிகிறது.

திரு. நாகேஸ்வரராவ் தமது 60-வது படத்தின்போது ஆந்திரத்தைச் சேர்ந்த வெங்கடேஸ்வரா கல்லூரிக்கு பெருந் தொகையை நன்கொடையாக அளித்திருந்தது தெரிந்ததே.

ஆந்திரத்தில் பிறந்து சென்னையில் வாழும் திரு. நாகேஸ்வரராவ் தெலுங்கு, தமிழ்ப் படங்களில் நடித்து இருதரப்பு ரசிகர்கள் ஆதரவும் பெற்றதால், வளர்ந்த தமிழகத்திற்கு நன்கொடையளிக்க முன்வந்துள்ளார்.

# நெஞ்சில் ஓர் ஆலயம்

## ஆசிய திரைப்பட விழாவுக்குச் செல்லும்

இளம் டைரக்டர் ஸ்ரீதரின் வெற்றிச் சித்திரமான 'நெஞ்சில் ஓர் ஆலயம்' கொரியாவில் நடைபெறவிருக்கும் 9-வது ஆசிய திரைப்பட விழாவுக்கு செல்கிறது.

இந்தியத் திரைப்பட அதிபர்கள் கூட்டமைப்பு இப்படத்தை தேர்ந்தெடுத்துள்ளது.

தென் கொரியாவின் தலைநகரான சியோலில் இம்மாதம் 12-ம் திகதி நடைபெற விருக்கும் ஆசியத் திரைப்பட விழாவில் 'நெஞ்சில் ஓர் ஆலயம் திரையிடப்படும்' [illegible] போட்டியில் இப்பட[illegible]ந்து கொள்ளாது.

# பம்பாய் சமஸ்கிருத பரீட்சைகளில் சித்திபெற்ற யாழ்ப்பாண மாணவர்கள்

அச்சுவேலி, புதன்

சமஸ்கிருத விஸ்வ பரிஷத் புத்தூர்க் கேந்திரத்திஞல் சென்ற மாசி மாதத்தில் யாழ்ப்பாணம் நாவலா வித்தியா சாலையில் நடத்தப்பட்ட பாரதீய வித்தியா பவன சமஸ்கிருதப் பரீட்சைப் பெறுபேறுகள் பின்வருமாறு:-

பிராரம்ப பரீட்சையில் சுன்ஞகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவி சி. லோகேஸ்வரி உயர்தர சித்தி பெற்றுக் கேந்திரப் பரிசு பெறுகிருர்.

### பரிசய பரீட்சை

யாழ்ப்பாணம். மத்திய கல்லூரி:- த. சகாதேவன். (இரண்டாம் பிரிவு)

### பிரவேச பரீட்சை

கரவெட்டி வாணி கலைக்கழகம்:- செ. சரோஜினிதேவி (இரண்டாம் பிரிவு), வெ. பாலசுப்பிரமணியம் (இரண்டாம் பிரிவு), க. நடராசா (மூன்ரும் பிரிவு)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி:- சி. கருணனந்தம் (இ. பி.), க. லோகநாதன் (இ. பி.)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி:-த. இராமநாதன் (மு. பி.), சி. இராசேஸ்வரி (மு. பி.)

சுன்ஞகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி:- வே. சண்முகலிங்கம் (இ. பி.), ஆ. கமலநாதன் (இ. பி.)

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி:- இ. ஜயகுணரத்தினம் (இ. பி.), க. கிருஷ்ணசாமி (மு. பி.)

### பிராரம்ப பரீட்சை

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி:- கு. சண்முகநாதன் (இ. பி.), ம. இராசேஸ்வரி (இ. பி.), சி. விசாகரத்தினம் (இ. பி.), கு. சாந்தகுணநாயகி (இ. பி.), ந. விமலாதேவி (மு. பி.)

ஊர்காவற்றுறை அர்ச் அந்தோனியார் கல்லூரி:- து. தியானேஸ்வரன் (மு. பி.), சோ. மகாலிங்கம் (மு. பி.), இ. மரியநாதன் (மு. பி.), பி. அன்ரன் (மு. பி), பி. ஸ்ரனிஸ்லாஸ் (மு. பி)

சுன்ஞகம் சிவதர்ம சம்வர்த்தனீ பாடசாலை:- சி. நாகேஸ்வரசர்மா (இ. பி.), சி. தியாகராஜசர்மா (மு. பி.), ச. மகேஸ்வரன் (மு. பி.), ச. ஜகதீஸ்வரன் (மு. பி.)

சுன்ஞகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி:- சி. லோகேஸ்வரி (உயர்தர சித்தி), ந. சிவசண்முகமூர்த்தி (இ. பி.)

புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி:- ப. நித்தியானந்தசர்மா (இ. பி.), சு. ஸ்ரீதரசர்மா (இ. பி.)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி:- இ. நேசலிங்கம் (மு.பி.) சூ. றெஜினு (மு. பி.)

தனிப்பட்ட பரீட்சார்த்தி:- ச. இராமச்சந்திரசர்மா(மு.பி.), துன்னலை கரவெட்டி.

# இரு கிராமசபைகளின் இடைத்தேர்தல் அபேட்சை மனு

யாழ்ப்பாணம், புதன்

உடுப்பிட்டி கிராமசபையின் 22ம் வட்டார இடைத்தேர்தலுக்கான அபேட்சை நியமனப் பத்திரங்கள் இம்மாதம் 11ம் திகதியும், 18ம் வட்டாரத்திற்கான அபேட்சை நியமனப் பத்திரங்கள் 24ம் திகதியும் தாக்கல் செய்யப்படவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

உடுவில் கிராமசபையின் 18ம் வட்டார இடைத்தேர்தலுக்கான அபேட்சை நியமனப் பத்திரங்கள் இம்மாதம் 26ம் திகதி தாக்கல் செய்யப்படவிருக்கிறது.

# ஸ்ரீ நாக விகாரையில் கண் திறப்பு விழா

ஊர்காவற்றுறை, புதன்

அண்மையில் புனருத்தாரணம் செய்யப்பட்ட யாழ்ப்பாணம் ஸ்ரீ நாக விகாரையில் புத்தபிரான் திருவுருவத்திற்கு கண் திறந்து வைக்கும் விழா இம்மாதம் 14-ந் திகதி காலை நடைபெறவிருக்கிறது.

முன்ஞள் அரசாங்க அதிபர் திரு. உடுகம புதிய விகாரையைத் திறந்து வைப்பார். இவ் வைபவத்தை யொட்டி இம்மாதம் 13-ந் திகதி பி. ப. 5 மணிக்கு யாழ்ப்பாணக் கச்சேரியில் இருந்து மகாபோதி வெள்ளரசுக்கிளையுடன் தேரோகுழுஸ்ரீ நாகவிகாரைக்கு வந்தடையும். ஸ்ரீநாகவிகாரை அதிபர் திரு. கடவத்துவநந்தாராம் சுவாமிக்கு வட இலங்கைப் பிரதம தேரோ எனனும் பட்டம் அளிக்கப்படும்.

# பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டிகள்

காத்தான்குடி, புதன்

கல்வி இலாகாவின் ஏற்பாட்டின்படி நடக்க இருக்கும் விளையாட்டுப் போட்டித் தொடரின் கைப்பந்தாட்ட, சைக்கிளோட்டப் போட்டிகள் இம்மாதம் 12-ம் திகதியன்று ஆரம்பமாகவிருக்கின்றன.

மட்டக்களப்புத் தெற்கு வட்டாரப் பாடசாலைகளுக்கிடையில் நடக்கவிருக்கும் போட்டிகளுக்கான பூர்வாங்க ஏற்பாடுகளை வட்டார வித்தியாதரிசி திரு. எம். ஜே. சீமாம்பிள்ளையின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் போட்டிக்குழு செய்துமுடித்துள்ளது.

காத்தான்குடி, கல்லடி உப்போடை, ஆரயம்பதி, நாவற்குடா, தாளங்குடா ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகள் பயிற்சிபெறுவதில் உற்சாகம் காட்டிவருகின்றன.

பிக்குகளுக்கு அன்னதானம் கொடுக்கவும் ஏற்பாடாகியுள்ளது. மந்திரி மைத்திரிபால சேனநாயக்கா வைபவத்தில் கலந்து கொள்வார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

புதன், 10-5-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 புல்லாங்குழல், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஓடிவிளையாடு பாப்பா, 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 இஸ்ரேல்தினநிகழ்ச்சி.

இரவு 7-00 பேரசிரியர் கே. குலரத்தினம்—பேச்சு, 7-15 நேயர் விருப்பம், 7-45 'தோட்டக்காரன்'—நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பாமாலை, 9-30 குரல்வகை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்).

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 ருதிப் பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 கோயம்புத்தூர் ஸி. ராஜலட்சுமி—பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 கோயம்புத்தூர் ஸி. ராஜலட்சுமி—பாட்டு, 1-30 வாத்திய இசை, 1-50 குரவிசை, 2-10 எஸ். தர்மாம்பாள்—பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப்பயிசி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப் பாடல், 7-35 ஏ. கோபால கிருஷ்ணன்—பேச்சு, 7-45 ராகம், தானம், பல்லவி டி. விஸ்வநாதன் — புல்லாங்குழல், 8-40 திரைப்பட இசை, 9-15 சுபத்த சங்கீதம், 9-30 அகில பாரத இலக்கிய நிகழ்ச்சி.

# தீவுப்பகுதியில் குடி தண்ணீர் கஷ்டம்

ஊர்காவற்றுறை, புதன்

கடும் வரட்சி காரணமாய்க் கிணற்று நீர் வற்றியமையால் புங்குடுதீவு, நெடுந்தீவு, ஊர்காவற்றுறைவாசிகள் குடி தண்ணிருக்குக் கஷ்டப்படுகிருர்கள்.




# சீன-பாகிஸ்தான் எல்லை பேச்சு
## அஸாத் காஷ்மீர் மக்கள் எதிர்ப்பு?

புதுடில்லி, மே 9

சீனவுடன் எல்லைப்பிரச்சினை சம்பந்தமாக பாகிஸ்தான் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றி அஸாத் காஷ்மீர் மக்கள் வன்மையாக ஆட்சேபம் தெரிவித்திருப்பதாயும் பல பொதுக் கூட்டங்கள் நடைபெற்றதாயும் அறிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் இந்தியா, தன் விமானப்படையின் பலத்தைப் பெருக்க முடிவுசெய்திருப்பதாய் அறிவிக்கப்படுகிறது. ரஷ்யரக போர்விமானங்களை இந்தியாவிலேயே தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ரஷ்யாவிடமிருந்து உடனடியாக போர்விமானங்களை வாங்கவும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

---

### ஹெலிகாப்டர் விமானங்கள் இந்தியாவில் தயாரிக்க ஏற்பாடு

புதுடில்லி, மே 9

இந்தியாவில் ஹெலிகாப்டர் விமானங்கள் தயாரிப்பதற்காக, பிரெஞ்சு கம்பனி ஒன்றுடன் பாதுகாப்பிலாகா பேச்சுவார்த்தை நடத்தி முடித்திருப்பதாகத் தெரிகிறது. உடன்படிக்கை கையெழுத்தானவுடன் இந்தத் தொழிற்சாலைகளுக்கான பூர்வாங்க வேலைகள்மேற்கொள்ளப்படும். அநேகமாக இந்தத் தொழிற்சாலைகள் சண்டிகாரில் நிறுவப்படலாம் எனத் தெரிகிறது.

ஒலிவேகத்தை மிஞ்சும் ரஷ்ய ரக விமானங்களைத் தயாரிக்கவும் இந்திய அரசாங்கம் உத்தேசித்துள்ளது. இது சம்பந்தமாக ரஷ்ய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் பூர்த்தியடைந்திருப்பதாகத் தெரிகிறது.

---

திருவனந்தபுரம், மே 9.

காலம் சென்ற திரு. அஜாய் கோஷுக்கு ஞாபகார்த்த சின்னமொன்றை கம்யூனிஸ்ட் கட்சி ஏற்படுத்துமென்று அக்கட்சியின் பொதுக் காரியதரிசி திரு. நம்பூதிரிபாட் தெரிவித்துள்ளார்.

ஆசிரியருக்குக் கடிதம்

### ஏன் இந்த பாரபட்சம்?

ஸ்தாபனமொன்றிலோ அல்லது கடையொன்றிலோ ஒருவர் வேலை பார்த்தால், சேமலாபநிதிக்காக அவரது சம்பளத்தில் நான்கு சத விகிதம் கழிக்கப்படுகிறது. இதனுடன் குறிப்பிட்ட நபர் வேலை செய்யும் ஸ்தாபனமோ அல்லது கடையோ ஆறுசதவிகிதம் சேர்த்து அரசாங்கத்திடம் இப்பணம் முழுவதையும் ஒப்படைக்கிறது. இதே போல் அரசாங்க காரியாலயங்களில் வேலைபார்க்கும் லிகிதர்களுக்கும் சேமலாப நிதிஒதுக்கப்படுகிறது. ஆனால்பத்து பதினைந்து வருடங்களாக கடமையாற்றும் சப்போஸ்ட் மாஸ்டர்களுக்கு இந்தச் சலுகையை அரசாங்கம் அளிக்காதது பெரிதும் வருந்தத்தக்கதோர் செயலாகும்.

அரசாங்கத்துக்காக காலை எட்டுமணிமுதல் மாலை ஐந்து மணிவரை கடமையாற்றும் சப்போஸ்ட் மாஸ்டர்களுக்கு அரசாங்கம் சேமலாபநிதிச் சலுகை அளிக்காதது கவலைக்கிடமான ஓர் செய்கையாகும். மற்றவர்களிடமிருந்து சேமலாபநிதியாக அதிகப்பணம்பெறும் அரசாங்கம், சப் போஸ்ட்மாஸ்டர்கள் விஷயத்தில் பாரபட்சமாக இருக்கக்கூடாது. இவர்களுக்கும் சேமலாபநிதி அளிக்கப்பட வேண்டும். அரசாங்கத்துக்காக சேவைசெய்யும் இவர்கள் விஷயத்திலும் அரசாங்கம் அக்கறை செலுத்தவேண்டியது அவசியமே!

எம். கனகரத்தினம்,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

---

புதுடில்லி, மே 9

போர்த்துக்கல் ராணுவத்திலிருந்து விலகிய கோவானியர்கள் விரும்பினால் இந்திய ராணுவத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்றும் சேருபவர்களுக்கு இந்திய வீரர்களுக்குரிய சம்பளம் கொடுக்கப்படும் என்றும் பிரதமர் நேரு அறிவித்தார்.

### செக். குடியரசு தினம்

கொழும்பு, புதன்

நேற்று மாலை லங்கா-செக்கோஸ்லோவேகியா நட்புறவுச் சங்கத்தின் சார்பாக செக்கோஸ்லோவேகியா குடியரசுதினம் கொண்டாடப்பட்டது. கல்வி மந்திரியின் பாராளுமன்றக்காரியதரிசி திரு. வி. டி. ஜி. கருணரத்ன கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

திரு. ரொனி டி மெல் பேசுகையில் செக்கோஸ்லோவேகியாவில் பூரண மதசுதந்திரம் இருப்பதாயும் ஏராளமான கத்தோலிக்க தேவாலயங்கள் அங்கு இருப்பதாயும் கூறினர்.

திரு. பீட்டர்கெனமன் பேசுகையில்; கந்தளாயில் செக். உதவியுடன் சீனி உற்பத்தி சாலை நிர்மாணிக்கப்பட்டதுபற்றியும், சப்பாத்துதொழிற்சாலை தயாரிக்க செக்கோஸ்லோவேகியா அளித்த உதவி பற்றியும் குறிப்பிட்டார்.

திரு. வி. டி. ஜி. கருணரத்ன பேசுகையில் செக்கோஸ்லோவேகியாவின் உதாரணத்தை இலங்கை பின்பற்ற வேண்டும் எனக் கூறினர்.

---

### தமிழ் தெரிந்த பொலிஸார் இல்லை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் இப்பொழுது தமிழ் தெரிந்த எவரும் உயர்ந்த பதவிகளில் இல்லாது இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். மூன்று நான்கு சார்ஜன்ட்மார் மாத்திரம் தமிழ் தெரிந்தவர்களாக இருக்கின்றனர். இதனால் அங்கு அலுவல் ஏதாவது பார்ப்பதற்காகச் செல்லும் பொது மக்கள் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர் எனத் தெரிகிறது. அண்மையில் இங்கிருந்த ஒரே ஒரு தமிழரான இன்ஸ்பெக்டர் ஒருவரும் இளைப்பாறிச் சென்றுள்ளார்.

---

### நான்கு அங்கத்தவர் அறிக்கை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாநகரசபையைக் கலைத்து அதன் நிர்வாகத்தை ஒரு விசேஷ ஆணையாளரிடம் ஒப்படைக்க வேண்டுமென்ற, ஜனநாயக உரிமைகளைப் பறிமுதல் செய்யும் இப்படியான முயற்சியில் பொறுப்புணர்ச்சியுள்ள எவரும் ஈடுபட மாட்டார்களெனத் தாங்கள் நம்புவதாக நான்கு அங்கத்தவர்கள் கைச்சாத்திட்ட ஒரு அறிக்கையில் தெரிவித்திருக்கின்றனர்.

திருவாளர்கள் பீ. எம். ஜோன், ஜே. எஸ். அழகையா, தா. ச. துரைராசா, நா. த. செல்லத்துரை ஆகியோர் இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கின்றனர்.

---

### கதிர்காம விகாரையின் புனரமைப்பு

கொழும்பு, புதன்

கதிர்காமத்திலுள்ள ஸ்ரீ விகாரையின் புனரமைப்பு வேலை நாளை தொடங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் இந்த வேலைக்கு ஏற்கனவே 50 ஆயிரம் ரூபாய் நன்கொடை அளித்திருக்கிறது.

---

### கடத்தல் பொருள்கள் கைப்பற்றப்பட்டன

சென்னை, மே 9

சிதம்பரம் மார்க்கமாக கொழும்பிலிருந்து சட்டவிரோதமாக கடத்தப்பட்டதாகக் கூறப்படும் ரூ. 140,000 மதிப்புள்ள நைலோன் பொத்தான்கள், பிளேடுகள் முதலியவைகளை மைலாப்பூர் சி. ஐ. டி. காலனியில் ஒரு வீட்டிலிருந்து சென்னை சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன. இது சம்பந்தமாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிகிறது.

### நாவலர் பாடசாலை வளர்ச்சி
#### ஆசிரியர் சங்க காரியதரிசி அறிக்கை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் நாவலர் பாடசாலை ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் திரு. இ. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது.

காரியதரிசி திரு. சி. சீவரத்தினம் தமது அறிக்கையில் தெரிவித்ததாவது:-

இப்பாடசாலை ஸ்தாபகரான நாவலர் அவர்கள் தமிழும் சைவமும் என்றென்றும் வளர வேண்டுமென்ற நன்நோக்குடன் 113 வருடங்களுக்கு முன் இதனை ஸ்தாபித்தார். அன்னாரது இலட்சியங்களைப் பின்பற்றி நடந்துவருவதுடன் ஏனைய பாடசாலைகளுக்கும் ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்துவரவேண்டியது அவசியமாகும்.

பாடசாலை வித்தியாதிபதி முகாமையின் கீழ் வந்துள்ளபோதிலும் ஆசிரியர்களதும் மாணவர்களதும் தளராத முயற்சியினால் பல வைபவங்கள் முன்னாள் முகாமையாளரின் உதவி எதுவுமின்றியும் சிறப்புடன் நடைபெற்றது.

இப்பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது.

ஆகவே முன்னரிலும் பார்க்க இப்பொழுது எமது பொறுப்பு அதிகமாயுள்ளது. பாடசாலையின் வளர்ச்சி ஆசிரியர், பெற்றோர், அபிமானிகள் யாவரதும் ஒத்துழைப்புடன் நாவலர் பெருமான் இலட்சியங்களை நிறைவேறச் செய்யவேண்டும். அதில் முக்கிய பங்கு ஆசிரியர்களாகிய எங்கள்மேல் இருக்கின்றது என்பதை மனதில் கொண்டு கருமமாற்ற வேண்டியதும் அவசியமாகும்.

புதுவருட உத்தியோகத்தர் தேர்தலின்போது தலைவராக தலைமையாசிரியர் திரு. இ. திருநாவுக்கரசுவும், காரியதரிசியாக திரு. சி. சீவரத்தினமும், தனாதிகாரியாக திரு. சி. முத்துத்தம்பியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

### சீனவிலிருந்து அகதிகள் வெளியேற்றம்

ஹாங்காங், மே 9

கம்யூனிஸ்ட் சீனவிலிருந்து ஆயிரக்கணக்கான அகதிகள் சென்ற வெள்ளிக் கிழமையிலிருந்து ஹாங்காங்கிற்குள் ஓடிவந்தவண்ணம் இருக்கிறார்கள் என்று நேரில் பார்த்தவர்கள் கூறுகிறார்கள். ஆனால் இது சம்பந்தமாக ஹாங்காங் அதிகாரிகள் எதுவும் கூற மறுத்துவிட்டார்கள்.

---

# 'ஈழநாடு' கிரிக்கெட் போட்டி

'விக்கினராஜா பரிசுக் கிண்ணத்துக்காக "ஈழநாடு" நடாத்தும் வடமாகாண கிரிக்கெட் வீரர் 1962 போட்டிக்கு, இதுவரை நமக்குக்கிடைந்த கூப்பன்களின் பிரகாரம் முதல் 9 இடங்கள் வகிப்பவர்களின் பெயர்கள் வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | கே. பாலகிருஷ்ணன், | யாழ். இந்துக்கல்லூரி. |
| 2. | என். தியாகராஜா, | யாழ்ப்பாணக்கல்லூரி. |
| 3. | ஜே. கனகநாயகம், | யாழ். மத்தியகல்லூரி. |
| 4. | யே. அல்பிரட், | பரமேஸ்வராக்கல்லூரி. |
| 5. | ஜி. பாலசிங்கம், | ஹாட்லிக்கல்லூரி |
| 6. | மு. தெய்வேந்திரா, | சென்.ஜோன்ஸ்.கல்லூரி. |
| 7. | என். ஏ ஸ்ரீ பத்மராஜா, | யாழ்ப்பாணக் கல்லூரி. |
| 8. | எஸ். மகமட், | யாழ். மத்திய கல்லூரி. |
| 9. | டி. எம். செல்வநாயகம், | சென்.ஜோன்ஸ்கல்லூரி. |

### வடமாகாண கிரிக்கெட் வீரர் 1962

'விக்னராஜா' பரிசுக் கிண்ணத்துக்காக 'ஈழநாடு' நடாத்தும் தெரிவு.

1962-ம் ஆண்டின் வடமாகாண கிரிக்கெட் வீரராகப் பின்வருபவரை நான் தெரிவு செய்கின்றேன்.

கிரிக்கெட் வீரர் ______________________

கல்லூரி ______________________

எனது பெயர் ______________________

விலாசம் ______________________

இக்கூப்பனைக் கத்தரித்து 'கிரிக்கெட் வீரர் 1962', C/o. 'ஈழநாடு', தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்புக.

4வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)
ஸ்ரீ கிருஷ்ண (திருக்கோணமலை) மொடர்ன் (பதுளை) லக்ஷ்மி (ரத்தினபுரி)
விஜிதா (மஸ்கெலியா) தீவொளி (நுவரெலியா) ஜெமினி (ராகல)
நியூசினிமா (குருணகலை)

இலட்சியங்கள் தான் மனித வாழ்வில் நிலைத்து நிற்கின்றன, என்ற அடிப்படையிலே உருவாகி...
இன்ப வாழ்வுக்கு, இதய நிறைவுக்கு காதலே ஆதாரம் என்று ஒளி காட்டி....
ஒன்றுபட்ட இல்லறத்திலேதான் உள்ள அமைதி பிறக்கும் என்பதை நிலை நிறுத்தி....
பிரிவிலே ஏற்படுகின்ற வேதனை மிகமிகப் பொல்லாதது என்று எடுத்துக் காட்டி....
இன்பக் காட்சிகளும், இனிய பாடல்களும் இணைந்த காதல் காவியமாக, உங்கள் இதயத்தைக்கொள்ளைகொள்ள வந்திருக்கிறது....



சிவாஜி கணேசன்-சரோஜாதேவி
எம். ஆர். ராதா - சௌகார் ஜானகி
நடித்த
பாலும் பழமும்

மனோஹரா (யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன் நடித்த
அந்தநாள்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மே மாதம் 10-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.